# மன்றம்

வார ஏடு — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

லர் 6 — இதழ் 1 ★ 5-5-57 ★ விலை 16 காசு


## ★ மே நாள்! ★

மே முதல் நாள் தொழிலாளரின் திரு நாள்! எங்கெல்லாம் உழைப்பு நல்கப்படுறதோ, எங்கெல்லாம் உழைப்பாளரின உரிமை கேட்கப்படுகிறதோ, அங்கெல்லாம் மே நாள் வருகிறது! ஆலைத்தொழிலாளர்கள் அணி வகுத்து நிற்கின்றனர். வயல்களில் பாடு படுவோர் கூடி வருகின்றனர், சுரங்கத்தின் ஆழத்தில், இருண்ட குகைகளில் அமிழ்ந்துகிடந்தோர் வெளி வந்து நிற்கின்றனர். சேற்றிலே, சகதியிலே, நெருப்பின் முன்னுலே, நீரின் மத்தியிலே. மலையுச்சியிலே, மணல் மேட்டிலே வியர்வையைச் சிந்திடும் பெரியதொரு கூட்டம், மே நாளன்று ஒன்று திரண்டு, மக்கட் பெருங் கடலாக நிற்கின்றது. அவர்களிட மிருந்து எழும் உரிமைக் குரல் கடலலையைப் போல ஒலித்துக்கொண்டுவருகிறது.



“உழைத்தோம், எங்களுக்கு உணவு இல்லையே!” உழவர்கள் கேட்கின்றனர்.

“ஆடைகள் நெய்தோம், எங்களுக்கு ஒரு முழத் துணிகூட கிடைக்கவில்லையே!” ஆலைத் தொழிலாளி அல்லலுறுகிறுன்.

“காட்டை அழித்தோம்; கல்லை உடைத்தோம், மண்ணைக் குழைத்தோம், பெரும் மாளிகைகள் அமைத்தோம்; ஆனுலும் எங்கள் குடிசையில் மேலே கூரையில்லை!”

“மலையைக் குடைந்தோம், மண்ணுக்குள் நுழைந்தோம், கனிகள் வெட்டினேம், செல்வம் பல சேர்த்தோம். ஆனுல் எங்கள் குடிசையில் உடைந்த பாத்திரங்கள்தாம்.!”

உழைப்பில் மலர்ந்தது உலகம். ஆனுல் உழைப்பை நல்கியவனுக்கு உலகம் இடந்தர மறுக்கிறது, உணவு, உடை தர மறுக்கிறது!

அவனுடைய உடலுழைப்பினுல் சேறு செந் நெல்லாயிற்று, செம்மண் பருத்தியாயிற்று, காடு நாடானது, மேடு மாளிகையாயிற்று!

ஆற்றை வளைத்தான், ஆடைகள் நெய்தான், சாலைகளை அமைத்தான், சோலைகளைத் தந்தான்!

அவன் சிந்திய வியர்வையில் கரம்பு கழனியானது, பாலைவனத்தின் அருகே பசும்புல் படர்ந்தது!

அவன் விட்ட பெருமூச்சால் கடலின் மீது கப்பல்கள் செல்கின்றன, நிலத்தின் மீது நீராவி யந்திரங்கள் ஓடுகின்றன. வானில் விமானங்கள் வட்டமிடுகின்றன!

அவன் பரிமாறிய பச்சை இரத்தத்தால், வனமாகக் கிடந்த இந்த உலகம் மக்கள் வாழக்கூடிய இடமாக ஆயிற்று!

இவ்வளவு புதுமைகளை வையத்துக்கு வழங்கிய தொழிலாளிக்குக் கிடைத்தது என்ன? பஞ்சம், வறுமை, பட்டினி, நோய், கடைசியாகச் சாவு!

அவன் விதைக்கிறுன், அவனுக்கு உணவில்லை! அவன் நெய்கிறுன், அவனுக்கு உடையில்லை! அவன் கட்டுகிறுன், அவனுக்கு இடமில்லை! அவன செய்கிறுன், அவனுக்கு எதுவுமில்லை!

அவன் விதைக்கிறுன், வேறு யாரோ அறுவடை செய்கிறுர்கள்! அவன் நெய்கிறுன், வேறு யாரோ உடுத்துகிறுர்கள்! அவன் கட்டிடமெழுப்புகிறுன், வேறு

(2-ம் பக்கம் பார்க்க)

## “வழக்கறிஞர்கள் நாடாளலாமா?”

★

வழக்கறிஞர்கள் நாடாளத் தகுதியுடையவர்களா? என்ற கேள்வி தமிழ்நாட்டு அரசியலில் எழுந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வழக்கறிஞர்களாயிருப்பதற்கும், நாடாள்வதற்கான தகுதிக்கும் என்ன முரண்பாடு இருக்கிறது என்று கேட்கத் தோன்றும். அதுவும் இந்தியாவில் சட்டம் படித்தவர்கள்தாம் அரசியலில் அதிகமாக ஈடுபட்டு உழைத்தவர்கள். தேசியத் தலைவர்களில் பலர் சிறந்த சட்ட நிபுணர்களாக, நல்ல வழக்கறிஞர்களாக இருந்து, பின் அரசியலில் பங்கெடுத்துக் கொண்டார்கள். மோதிலால் நேரு, சி. ஆர். தாஸ், காந்தியார் போன்றவர்களெல்லாம் வக்கீல்களாக இருந்தவர்கள்தாம். இப்பொழுது இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருக்கிற ராஜேந்திர பிரசாதும் ஒரு வக்கீலாக இருந்தவர், பிரதமர் பண்டித நேரு கூட ஒரு வழக்கறிஞராகப் படித்து வந்தவர், இவர்களுடைய சட்டக் கல்வி, பின்பு அரசியலில் பயன்பட்டதே தவிர கெடுதல் தரவில்லை. அந்தக் காலத்தில், வழக்கறிஞர்களுக்குத்தான் அரசியலில் கலந்து கொள்வதற்கான உரிமையும் ஓய்வுமிருந்தன.

“என்னப்பா, வழக்கறிஞர்களுக்காகப் பரிந்து கொண்டு பேசுகிருய்! அவர்களே மற்றவர்களுக்கு வக்காலத்து வாங்கி பேசுகிறவர்கள்! அவர்களுக்கு என்ன குறை வந்துவிட்டது, அவர்களுடைய அரசியல் சேவையைப் பற்றிச் சொல்ல!” என்று கேட்கலாம். அந்தக் காலத்தில் வழக்கறிஞர்கள் அரசியலில் ஈடுபட்டனர். ஆனுல் இது—தமிழ்நாட்டு அரசியலைப் பொறுத்தவரை காமராஜர் காலம்! காமராஜர் “தகுதிப்” பரிட்சைப்படி பார்த்தால், வழக்கறிஞர்களுக்கு இருந்த தகுதி போய்விட்டது. அவர்கள் ஒரு பெரிய “குற்றத்தைச்” செய்துவிட்டார்கள்.

அதுதான் “வழக்கறிஞர்கள் நாடக மன்றம்” என்ற ஒன்றை ஆரம்பித்தது! சென்னையில் தலைமை நீதிபதி அவர்கள் முன்னிலையில் சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர்கள் ஒரு நாடக மன்றம் துவக்கியிருக்கிருர்கள்.

நாடகமென்றுலே காமராஜருக்கோ, காமராஜரை ஆதரிப்பதாக நினைத்துக் கொண்டு தங்களை அலங்கோலப்படுத்திக் கொள்பவர்களுக்கோ பிடிக்காது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது இருந்த கோபம், அவர்களுக்கு ஆதரவாயிருந்த நாடகத்தின் மீது பாய்ந்து பின் நடிகர்கள் மீது திரும்பி, கடைசியாக தேர்தல் காலத்தில் “நடிகர்கள் நாடாளலாமா?”, “சினிமா கட்சி சட்டசபைக்கு போகலாமா?” என்பன போன்ற பெரிய தத்துவங்கள் பேசப்பட்டன. இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மட்டுமல்ல, உயர்நீதி மன்றத்தில் இருக்கும் சட்ட அறிஞர்கள் கூட நாடக மன்றம் ஒன்றைத் துவங்கியிருக்கிருர்கள். அதைப் பாராட்டி தலைமை நீதிபதி பேசியுமிருக்கிருர். நமது மீது இருந்து நாடகத்தின் மீது போன கோபம், இனி நடிக்கின்ற எல்லோர் மீதும் சென்று, “நாடகம் நடிக்கும் வழக்கறிஞர்கள் நாடாளும் தகுதியுடையவர்களா? “சட்டம் படித்தவர்கள் சட்டசபைக்குச் செல்லலாமா?” என்ற கூச்சல் எழலாம்!

இன்னும் ஒருபடி அதிகமாகி “சட்டம் படித்தவர்களென்ன, படித்தவர்களுக்கே சட்டசபைக்குப்போக என்ன தகுதி இருககிறது?” என்ற கேள்வி வரும்.

காமராஜருக்குத் தகுந்தபடி “சட்டசபைக்குச் செல்லும் தகுதிகளை” நிர்ணயித்து, ஒவ்வொருவராக ஒதுக்கித் தள்ளிப் பார்த்தால் கடைசியாகக் காமராஜர் ஒருவர் மட்டும் தான் சட்டசபையில் வீற்றிருக்கமுடியும்! மிக நிம்மதியான நிலை!

# மந்திரிகளுக்குப் பாடம்

"நாடாளும் மந்திரிகளுக்கு, தாங்கள் பொறுப்பேற்கும் துறை பற்றிய அறிவு வேண்டும். அதற்காகத்தகுந்த ஆசிரியர்களைக் கொண்டு அவர்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்தால் நல்லது."

—இவ்வாறு தோழர் வி. பி. ராஜு என்பவர், சென்றமாதம் பங்களூர் புள்ளிவிவர ஆராய்ச்சிக் கழகத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார். தற்பொழுது காங்கிரஸ் மந்திரிகள் பொறுக்கப்படும் விதத்தில் அவர் கூறியிருப்பது முற்றிலும் சரியென்றே தோன்றுகிறது. எந்தத் துறையில் யார் வல்லவர்கள், யாரிடம் ஒப்படைத்தால், அந்தத்துறைசரியாகஇயங்கும் எனக் கண்டறிந்து ஒப்படைத்தால், அரசாங்கம் நன்றாகநடைபெறும் - நாட்டுக்கும் நல்லது. இதற்காகக் காங்கிரசுக் கட்சியினர் தமது கட்சிக்கு வெளியே ஆள் தேட மனமில்லையென்றாலும், கட்சிக்குள்ளேயேயாவது இருப்பவர்களில் சிறந்தவர்களைப் பொறுக்கி மந்திரி இலாகாக்களைப் பிரிக்கலாம். ஆனால் வெவ்வேறு காரணங்களால் மந்திரிகள் முதலில் பொறுக்கப்பட்டு, பின்பு மந்திரி இலாகாக்கள் பிரிக்கப் படுகின்றன. சீட்டுக் குலுக்கி எடுப்பது போல! ஒன்றுமே தெரியாத ஒருவர், மந்திரி வேலை பெறும் வித்தையை மட்டும் கற்று மந்திரி பதவி யடைந்து விட்டால், அவருக்கு அவருடைய இலாகாபற்றிய தெளிவில்லாததால் சரியான ஆட்சி முறை இல்லாமற் போகிறது. இந்தக் குறையை நீக்கத்தான், மந்திரி பதவிக்கு வருமுன் தான் தகுந்த அறிவு இல்லையென்றாலும், மந்திரியான பிறகாவது ஒரு தெரிந்த நிபுணரை வைத்துக் கற்றுக்கொள்ளவேண்டும் என தோழர் வி. பி. ராஜு அவர்கள் யோசனை கூறினார்.

இவ்வாறு மந்திரிகளைப் பள்ளிக்கூடத்தில் போடச் சொல்லும் தோழர் வி. பி. ராஜு எதிர்க் கட்சிக்காரர் அல்ல, காங்கிரஸ் கட்சிக்காரர் தான்! காங்கிரஸ்கட்சிக்காரர் என்பது மட்டுமல்ல, காங்கிரஸ் மந்திரியாகவும் இருக்கிறார்! மந்திரியாக உள்ள அவர் அவ்வாறு கூறியதற்குக் காரணத்தையும் அவரே சொல்லியிருக்கிறார். அவருடன் கூட வேலைசெய்யும் மந்திரிகள் பலருக்குத் தங்கள் இலாகாபற்றிய தெளிவு கிடையாதாம்! மந்திரி பதவிகளில் இருப்பவர்களின் அறிவு, ஆற்றல், தெளிவு பற்றி மந்திரி ஒருவரே ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. தோழர் வி. பி. ராஜு அவர்கள் ஐதராபாத் மாநிலத்தில் தொழில் மந்திரியாக இருக்கிறார். அவருக்கு மற்ற மந்திரிகளின் அலங்கோல ஆட்சி முறை பற்றித் தெரிந்திருக்கும்.

இந்தியாவில் காங்கிரஸ்ஆட்சியில், மந்திரி பதவிகள் விலை கூறப்படுகின்றன. பலர் மந்திரி பதவிக்கு ஆசைப்படுகின்றனரேயன்றி, மந்திரி பதவிக்குரிய பொறுப்புகளை அவர்கள் உணரவில்லை.

தோழர் வி. பி. ராஜு சொல்லியது நல்ல யோசனை தான். தெரியாத மந்திரிகள் தெரிந்தவர்களிடம் பாடம் கற்றுக் கொண்டால் நல்லது. இல்லையானால் பின்பு அந்த மந்திரிகளுக்கு மக்கள் "நல்ல பாடம்" கற்பிப்பார்கள்!

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

யாரோ குடியிருக்கிறார்கள்! அவன் பல பொருள்களைச் செய்கிறான், அவற்றை வேறு யாரோ வைத்துக் கொள்கிறார்கள்!

விசித்திரமான உலகம்! வேதனை நிரம்பிய காட்சிகள்!

இதற்கு முன் வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு, மனித சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வலிமையை விஞ்ஞான வளர்ச்சி நமக்கு அளித்துள்ளது. மண் வளமிருக்கிறது, மனவளமும் உயர்ந்துள்ளது, உலகின்வளம் முன்பு இருந்ததைவிடப் பல மடங்கு அதிகமாக வளர்ந்துள்ளது; ஆனால் அதே நேரத்தில் முன்பிருந்ததைவிட அதிகமான வறுமை ஒருபுறம் காணப்படுகிறது.

வளமையினருகே வறுமை, வளமையின் மத்தியில் வறுமை, எவர்கள் வளமையை உண்டாக்கித் தந்தார்களோ அவர்களுக்கு வறுமை! அது தான் இன்றைய உலகின் விசித்திர நிலை!

உற்பத்தி பெருகுகிறது, ஆனால் பெருகிய பொருள்கள் சரியான முறையில் பிரித்துக் கொடுக்கப்படவில்லை! ஆலைகளில் ஏராளமாக ஆடைகள் தயாரிக்கப் படுகின்றன, மலைமலையாகக் குவிகின்றன, "எங்கே விற்கலாம்? எங்கே ஏற்றுமதி செய்யலாம்?" எனத் திட்டமிடுகின்றனர். அதே சமயத்தில் அந்த ஆலைக்குப் பக்கத்தில் இருக்கும் குப்பத்தில் ஆயிரக் கணக்கானவர்கள் ஆடை யில்லாமல் வெய்யிலிலும் குளிரிலும் அவதிப்படுகின்றனர்! வாழ்க்கை வசதிகளை அதிகப்படுத்துவதற்கான திட்டங்களை விஞ்ஞானம் தந்தது; ஆனால், அவற்றை எல்லோரும் அடையும்படியான வழியை பொருளாதார முறை வகுக்கவில்லை! அந்தக் காரணத்தினால், தொழிலாளிகள் எவ்வளவுதான் பாடுபட்ட போதிலும், பாடுபட்டதின் பலன் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. எப்படியோ பலன் மறைந்து விடுகிறது! உற்பத்திக்கும், உற்பத்தியான பொருள்களைப் பிரித்துக் கொடுக்கும் வகைக்கும் இடையிலுள்ள கோளாறு தவிர்க்கப் பட்டால்தான் உழைப்பாளரின் வாழ்வு உயரும்!

சமூகத்தில் உள்ள அனைவரும் தங்கள் உழைப்பை நல்கி, வாழ்க்கை வசதிகளைப் பெருக்கவேண்டும். பின் பெருகிய வசதிகள் ஒவ்வொருவருடைய தேவைகளையும் பூர்த்தி செய்யு மளவுக்குப் பிரித்துத் தரப்படவேண்டும். அதைத்தான் **"சக்திக்கேற்ற உழைப்பு தேவைக்கேற்ற வசதி"** என மிகச் சுருக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் கூறுகிறது.

மனிதனை மனிதன் சுரண்டுவது தவிர்க்கப்பட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடுகிறது. அதே சமயத்தில் ஒரு நாட்டை மற்றொரு நாடு சுரண்டுவதையும் தடுக்க அது போராடுகிறது.

பொருளாதாரத்தில் முதலாளித்துவம் ஏற்பட்டிருப்பதைப் போல, அரசியலில் ஏற்பட்டு வரும் முதலாளித்துவத்தையும் அது எதிர்த்துப் போராடுகிறது.

சமுதாயம், அரசியல், பொருளாதாரம் ஆகிய மூன்று அமைப்புகளிலும் முதலாளித்துவமுறைகள் நிலைபெற்றுள்ளன. அந்த மூன்று பிடிகளிலிருந்து நாட்டு மக்களை விடுவித்து, பேதமற்ற சமுதாயத்தை, விடுதலை உரிமை பெற்ற அரசியலை, "சக்திக்கேற்ற உழைப்பைப் பெற்று தேவைக்கேற்ற வசதிகளை" அளிக்கவல்ல பொருளாதாரத்தை அமைக்க, திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடுகிறது.

இந்திய உபகண்டத்தில் பார்த்தால், தென்னாட்டுத் தொழிலாளர் நிலை மிக மிக மோசமானது. வட நாடு, தென்னாடு இரண்டு பகுதிகளில், தென்னாட்டில் தொழில் வளம் குறைவு; தொழில் வளம் குறைவாயிருக்கின்ற காரணத்தால் வேலை கிடைப்பது அரிது. இருக்கும் ஒரு சில வேலைகளைப் பார்க்க மிகப்பலர் தயாராக இருக்கின்றனர். எனவே வேலை கிடைத்தாலும் அதில் கிடைக்கும் கூலி மிகக் குறைவாயிருக்கிறது.

பத்து பேர்களுக்குத்தான் வேலைஎன்கின்றபோது, வேலையில்லாத பதினைந்து பேர்கள் வந்து போட்டியிட்டால், குறைந்த கூலிக்கு எந்தப் பத்துப்பேர் வருகிறார்களோ அவர்களுக்கு வேலைகிடைக்கிறது. ஆனால் அதே சமயத்தில் வேலைகள் அதிகமிருந்து அதைச் செய்யக்கூடிய ஆட்கள் குறைவாயிருந்தால், பதினைந்து காலி இடங்களுக்குப் பத்துபேர்தான் வருகிறார்களென்றால், இடங்களை நிரப்ப அதிகமான சம்பளம் கொடுத்தால்தான் மற்றவர்கள் வருவார்கள். அந்தப்படி தென்னாட்டில் தொழில்வளம் குறைவாகவும், வடநாட்டில் தொழில் வளம் அதிகமாகவும் இருக்கின்ற காரணத்தால், வடக்கில் வேலை செய்பவர்களுக்கு அதிகக் கூலியும், தென்னாட்டில் அதே வித வேலைகளுக்குக் குறைந்த கூலி தரப்படுகிறது.

சாதாரணமாக வடநாட்டில் ஒரு ஆலைத்தொழிலாளிக்கு சராசரி ஆண்டொன்றுக்கு ரூ 500 கிடைத்தால், அதே வேலையை அதே நேரத்துக்குச் செய்கிற தென்னாட்டுத் தொழிலாளிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ 300 தான் கிடைக்கிறது. இந்தப் புள்ளிவிவரம் இந்திய அரசாங்கத்தினரால் தரப்பட்டது.

எனவே தென்னாட்டை தொழில் வளமுள்ள நாடாக்கினால்தான், வேலையில்லாமையைப் போக்கி, தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். அந்த உறுதியான அடிப்படையில் திராவிட முன்னேற்றக்கழகம் பாடுபடுகிறது. திராவிட முன்னேற்றக்கழகம் எந்த அளவுக்கு வெற்றிபெறுகிறதோ அந்த அளவுக்குத்தான் தொழிலாளரின்—இந்த நாட்டு உழைப்பாளரின் வாழ்வு வளம்பெறும்.

நமது நாட்டில் தொழிலாளர்கள் பலவகையில் சிதறி காப்பாரற்று, கவனிப்பாரற்று, கிடக்கின்றனர். ஆலைத்தொழிலாளர்களிடை ஓரளவு அமைப்பு முறை இருக்கின்றது. ஆனால் அமைப்பு முறைகளின்றி லட்சக்கணக்கான பாட்டாளிகள், கல் உடைத்தும் கை வண்டி இழுத்தும், மண்வெட்டியும், மரமறுத்தும், ஆடுமாடு மேய்த்தும், ஏவல் வேலைகளைச் செய்தும் பிழைக்கின்றனர். சேற்றிலே உழைத்து, சகதி நிரம்பிய சேரிகளில் தங்கி, கல்வி என்றால் என்னதென்று புரியாமல், நல்ல வாழ்வு என்றால் என்னதென்று தெரியாமல், வறுமையின் வாட்டத்தை வாழ்நாள் பூராவும் அனுபவித்து, கன்னங்கருத்த இருட்டின் கறைகளாய், தொங்கும் நரம்பின் தூள்களாய், வாழ்கின்றனர்—வாழவில்லை வதைபடுகின்றனர், பின் சாகின்றனர்.

இங்குள்ள தொழிலாளர் நிலையை எண்ணும் பொழுது, கடல் கடந்து சென்று வாழும் நமது தொழிலாளர் படும் அவதிகளும் நம் கண் முன் வருகின்றன. பிறந்த நாட்டில் பிழைக்க வழியின்றி, கூலிகளாய், அடிமைகளாய் அயல் நாடு சென்று தேயிலை தோட்டத்திலோ, ரப்பர் காட்டிலோ, கண்ணீரும் கம்பலையுமாய் நின்றிடும் எண்ணற்ற தமிழர்களை நினைந்திடும்பொழுது நம்மிடம் அரசியல் உரிமை இல்லாத காரணத்தால்தானே அங்கு அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான உரிமைகள் கூடக் கிடைக்கப் பெறுமற் போகிறது என்ற ஏக்கம் பிறக்கிறது.

திராவிடத்தில் உரிமை பெற்ற அரசு இயங்குமாயின் இங்குள்ள வளம் பெருகி தொழிலாளர் வாழ்வு உயர்ந்து அயல் நாடுகளிலும் நமது விருப்பங்களுக்கு மதிப்புத் தரும் நிலை பிறக்கும். அத்தகைய புதியதொரு அரசு, புதியதொரு சமுதாயம் அமைய நாமனைவரும் பாடுபடுவோமாக

# மன்றம்

ஞாயிறு 5—5—57 சென்னை


## ஆறுவது ஆண்டு!

ஆறுவது ஆண்டுத் தொடக்கத்தில் "மன்றம்" நிற்கிறது! ஐந்து ஆண்டுகளை முடித்தபின், ஆறுவது ஆண்டின் முதல் இதழ் உங்கள் கரத்தில் இருக்கிறது!

ஐந்தாண்டுகள்வரை குழந்தைப்பருவம், ஐந்தாண்டுக்கு மேல் இளமைப்பருவம் தொடங்குகிறது! ஒரு குழந்தை முதலில் தவழ்ந்து, பின் தளர்நடையிட்டு, ஐந்தாண்டு பருவத்துக்குப்பின் விரைவாக நடந்து செல்ல முற்படுவதுபோல், மன்றமும் முதலில் திங்கள் ஒருமுறை ஏடாகத் தவழ்ந்து தவழ்ந்து, தேங்கித்தேங்கி வந்து, பின் திங்கள் இருமுறையாக தளர்ந்த நடையுடன் வந்து, கடைசியாக வாரம் ஒரு முறை என்று சற்று வேகமாக நடக்கவும் ஆரம்பித்து விட்டது! குடும்பத்திலுள்ள குழந்தையின் வளர்ச்சி எவ்வாறு குடும்பத்தினர் அனைவரையும் மகிழ்விக்குமோ, அவ்வாறு மன்றத்தின் வளர்ச்சி கண்டு திராவிட முன்னேற்றக் கழகமாகிய நமது குடும்பத்திலுள்ள அனைவரும் மகிழ்ச்சியுறுகிறோம். நமது குடும்பத்தைச் சார்ந்த இலக்கியப் பள்ளியின் பக்கம் சென்றால், பல குழந்தைகள் வளர்கின்றன. அங்கு "திராவிட நாடு" அண்ணனாக, மற்றக் கழகப் பத்திரிக்கைகள் தம்பியர் குழாமாக, அந்தப் பள்ளியில் திராவிட நாட்டு வரலாறு படிக்கப்படுகிறது, விடுதலைப் பரணி துவக்கப்படுகிறது! இந்த நாட்டு அரசியலில் தெளிவு தரப்படுகிறது! நமது நாட்டுப்படத்தை வரைகிறோம், நல்லதொரு வரலாற்றை எழுத ஆரம்பிக்கிறோம்! இழந்த செல்வங்களை மதிப்பிடுகிறோம், வரவேண்டிய வளங்களை கணக்கெடுக்கிறோம்! **"தென்னாட்டிலேயே, அரசியல் அறிவைப் புகட்டும் பத்திரிக்கைகள் திராவிட முன்னேற்றக் கழகத்தினரால்** நடத்தப்படுகின்றன" என்று மாற்றாரும் வியந்து கூறுமளவு, நமது பத்திரிக்கைகள் பணியாற்றி வருகின்றன. அந்தப் பணிபுரியும் வரிசையில் "மன்றமும்" ஒன்றாக, ஐந்து ஆண்டுகளைக் கடந்து ஆறுவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது!

மற்ற பத்திரிக்கைகளுக்கு இருக்கும் வாய்ப்போ, வசதியோ, பொருள் வகையில் ஆதரவோ நமக்குக் கிடையாது. வழவழப்பான தாளில், வண்ணமெருகேறிய ஓவியங்களுடன், கண்ணைக் கவரும் விதத்தில், அவை வெளிவருகின்றன.

வண்ணங்கள் நம்மிடமில்லை, ஆனால் நாட்டிற்குத் தேவையான எண்ணங்களைத் தாங்கி வருகிறோம்!

கண்ணைக் கவரும் விதத்தில் நமது பத்திரிக்கைகள் அமையவில்லை, ஆனால் நாட்டு மக்களின் கருத்தை அவை கவர்ந்துவிட்டன! எடுக்கின்ற ஏடு பழுப்புக் காகிதமாயிருந்தபோதிலும், அதிலே இருக்கின்ற எழுத்துக்களின் வரிசை கவர்ச்சிகரமாக இல்லையென்றாலும், அந்த ஏடும், அந்த ஏட்டில் இருக்கிற எழுத்துக்களும், தருகிற கருத்துக்கள் கவர்ச்சிகரமாக இருக்கின்ற காரணத்தால் தான், போட்டி மிகுதியாக உள்ள பத்திரிக்கைச் சந்தையில் இந்த ஏடுகளாலும் உலவ முடிகிறது!

நமது பத்திரிக்கைகள் ஒரு கொள்கைக்காக உண்டானவை, ஒரு குறிப்பிட்ட கொள்கையை நாட்டு மக்களிடை பரப்ப வேண்டுமென்ற குறிக்கோளுடன் நாம் பத்திரிக்கைகளை நடத்துகிறோம்.

கொள்கை வளர, பத்திரிக்கைகளை நடத்துகிறோம், பத்திரிக்கை வளர சில கொள்கைகளை நாம் தேர்ந்தெடுத்துக் கொள்ளவில்லை. நமது ஏடுகள் தரும் கருத்துக்கள் சிலருக்குக் கசப்பாக இருக்கின்றன, நமக்குத் தெரிகிறது. நமது ஏடுகள் காட்டும் குறிக்கோள் சிலருக்கு வெறுப்பாக இருக்கிறது, அது நமக்குப் புரிகிறது. ஆனாலும் அவற்றையெல்லாம் தாண்டி நாமெடுத்த பணி பலன் தருவது கண்டு மகிழ்ச்சியடைகிறோம். கழகம் வளர்ந்தபடி இருக்கிறது, கொள்கை பரவியபடி இருக்கிறது. பட்டி தொட்டிகளிலெல்லாம், சிற்றூர் பேரூர் தோறும், கழகக் கொடி பறந்தபடி இருக்கிறது! காகித விலை நஞ்சென ஏறியபோதிலும், கணக்குப் புத்தகம் கடுகடுத்த முகத்தைக் காட்டிய போதிலும், தொல்லைகள் பல சூழ்ந்து தடைப்படுத்திய நேரத்திலெல்லாம், நமது ஆர்வம் குறையாதிருந்ததற்குக் காரணம் நாமெடுத்த கொள்கை வளர்கிற அளவு மகிழ்ச்சியூட்டுவதாயிருப்பதுதான். "கொள்கை" கணக்கேட்டில் இருக்கிற ஏற்றம், தனிப்பட்ட பொருளாதார நலிவை மறக்கச்செய்து நமக்கு குதூகலத்தைத் தருகிறது!

"மன்றம்" படிப்பவர்கள் நம்மிடம் காட்டும் கனிவும், ஒரு நாள் தாமதப்பட்டு வந்தாலும் "ஏன் இன்று வரவில்லை?" என்று காட்டும் பரிவும், "மூன்று மாதத்துக்கு முன் வந்த மன்றம் 17ம் எண் இதழ் என்னுடைய தொகுப்பிலிருந்து தவறிவிட்டது; அந்த இதழ் ஒன்று தாருங்கள்!" என "மன்றம்" இதழ்களை மிகக் கருத்தோடு பாதுகாப்போர் காட்டும் ஆர்வமும் நமக்கு என்றும் மகிழ்ச்சி யூட்டுவதாயுள்ளன. "மன்றம்" இதழைத் தவறாது விரும்பிப்படிப்பவர்கள் தரும் பாராட்டுரைகள் நமக்கு ஊக்கத்தைத் தருவன. தொல்லைகள் பல துரத்தியடித்த நேரங்களில்கூட, நம்மை எதிர்பார்த்து இருப்பவர்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கக் கூடாதென்ற சீரிய நோக்குடன் "மன்றம்" பணியாற்றியது. "நல்லதொரு ஏடு" என அவர்கள் பாராட்டியதுதான், நாம் ஆற்றிய பணிக்குக் கிடைத்த பரிசாக நினைத்து உளமகிழ்ந்தோம்.

ஐந்தாண்டுகளைக் கடந்து, ஆறுவது ஆண்டுத் தொடக்கத்தில் இருக்கும் நாம், மன்றத்திடம் நீங்காப்பற்று கொண்டு ஆதரித்தவர்களுக்கும், ஊக்கந் தந்தவர்களுக்கும், அவ்வப்பொழுது சிறிதளவாவது "விளம்பரங்கள்" வரும் வகையில் விளம்பரங்கள் தந்துதவியவர்களுக்கும், அலுவலகம் அனுப்பும் பட்டியல்களுக்கு மதிப்பளித்து ஒத்துழைப்பைத் தரும் விற்பனையாளர்களுக்கும்-அவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலர் தான் என்றாலும் அவர்களும் "ஒத்துழையாமை" இயக்கங்களில் சேர்ந்திருந்தால் நமது நிலை மோசமாகி யிருக்கும்—பத்திரிக்கை நிலையுணர்ந்து செயலாற்றிய பண்பாளர்களுக்கும் நமது மகிழ்ச்சிமிக்க நன்றியைத் தெரிவிக்கின்றோம். இந்த நல்ல வேளையில், அவ்வப்பொழுது நமக்கெல்லாம் அறிவுரை புகட்டி பாதுகாத்து வரும் அறிஞர் அண்ணா அவர்களுக்கு நமது பணிவன்பான வணக்கத்தையும், அன்றாட நடை முறையில் உறுதுணையாயிருக்கும் கழகத் தோழர்களுக்கு வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். மன்றத்திற்குச் சிறந்த கட்டுரைகளையும், கவிதைகளையும் வழங்கி உதவிய தோழர்களுக்கும், ஓவியம் தீட்டிய ஓவிய நிபுணர்களுக்கும் நமது அன்பு நிறை நன்றியைத் தெரிவிக்கிறோம். என்றும்போல் இனிமேலும், "மன்றம்" இதுவரை எடுத்த நல்ல பெயரைக் காப்பாற்றும் விதத்தில் பணியாற்றும் என்ற உறுதிப்பாட்டைத் தெரிவித்து, மீண்டும் ஒருமுறை அனைவருக்கும் நமது உளங்கனிந்த மகிழ்ச்சியும் நன்றியும் உரித்தாகுக!

ஐந்தாண்டுகளைக் கடந்தோம், ஆறுவது ஆண்டிலும் உற்சாகம் ஆறாது, குறையாது, வளர்வோம் என்ற நல்ல நம்பிக்கையுடன் "புதிய" மலரைத் தொடங்குகிறோம்.

வளர்க நமது முயற்சி!
சிறக்க நமது செயல்கள்!
வாழ்க திராவிடம்!


**மன்றம் வார இதழின் சந்தா விபரம்**

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

| | | | |
|---|---|---|---|
| இரண்டாண்டு | .... | ரூ. | 15·00 |
| ஓராண்டு | .... | ரூ. | 8·00 |
| ஆறுமாதம் | .... | ரூ. | 4·00 |
| தனி இதழ் | .... | | 16 காசு |

**இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.**

வெளிநாடு (மலேயா-பர்மா)

| | | | |
|---|---|---|---|
| இரண்டாண்டு | .... | ரூ. | 18·75 |
| ஓராண்டு | .... | ரூ. | 10·00 |

**(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | .... | 20 காசு. |

# கேள் கொடுக்கப்படும்! தட்டு திறக்கப்படும்!’

**[21-4-57இல் சென்னையில் நடைபெற்ற அஞ்சல் பிரிப்பக அலுவலாளர் மூன்றுவது பிரிவினர் சங்கத்தினர் மூன்றுவது ஆண்டு விழாவில், இரா. நெடுஞ்செழியன் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு]**

தலைவர் அவர்களே! சிறப்பு அழைப்பாளர்களே! தோழர்களே!

சென்னை அஞ்சல் பிரிப்பக அலுவலாளர் மூன்றுவது பிரிவினர் சங்கத்தின் மூன்றுவது விழாவினை ஒட்டியும், சீசன் டிக்கட் வெற்றி விழாவினை ஒட்டியும் கூட்டப்பட்ட இந்தச் சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு பல கருத்துரைகளைக் கேட்கவும், சில கருத்துக்களைக் கூறிடவும் வாய்ப்பு ஏற்பட்டமை குறித்து மிக்க மகிழ்ச்சியுறுகிறேன். இந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த விழாக்குழுவினர்க்கு என் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தபால்-தந்தி ஊழியர்கள் சங்கம், மிக்க பொலிவோடும் வலிவோடும் வளர்ந்து, நாட்டிலுள்ள பிற தொழிற்சங்கங்களுக்கெல்லாம் சீரியதொரு எடுத்துக் காட்டாக விளங்கி வருவது போற்றி வரவேற்றுப் பாராட்டத்தக்க தொன்றாகும். எனக்கு முன்னால் பேசிய நண்பர்களெல்லாம், உங்கள் சங்கத்தின் சீரிய நோக்கங்களைப் பற்றியும், உங்கள் சங்கத்தின் நியாயமான கோரிக்கைகளைப் பற்றியும் அவற்றை நிறைவேற்றிவைப்பதற்கான வழிவகைகளைப் பற்றியும் நல்ல முறையில் எடுத்துரைத்தார்கள். நீங்கள் கோரியகோரிக்கைகளிலே, சிலவற்றிலே வெற்றிபெறப் போராடி வருகிறீர்கள். உங்களிடத்திலே காணப்படும் உறுதியும் ஊக்கமும், நீங்கள் மேற்கொண்டுள்ள முயற்சிகளும், கிளர்ச்சிகளும் வீண்போகா; அவைகள் உங்களுக்கு வெற்றிகளைப் பயந்தே தீரும்.

விமானக் கூடத்திலே வேலை செய்யும் அஞ்சல் பிரிப்பாளர்கள், நகரிலிருந்து சென்று வருவதற்கு வசதியாக இருக்கும்பொருட்டு, இலவச சீசன் டிக்கட்டு வழங்கியிருக்கிறார்கள் — இல்லை இல்லை அதனைப் போராடிப் பெற்றிருக்கிறீர்கள் என்பது மட்டற்ற மகிழ்ச்சிக் குரியதாகும். இது புதிதாகக் கிடைத்த ஒரு சலுகையா என்று நண்பர் ஒருவரை நான் கேட்டேன். இல்லை இல்லை, இழந்த உரிமை ஒன்றை மீண்டும் பெற்றோம் என்றார். 1955இல் கொண்டிருந்த உரிமையை 1956இல் இழந்து, மீண்டும் 1957இல் பெற்றிருக்கிறோம் என்று அந்த நண்பர் கூறினார். இன்றைய அரசாங்கத்தின் கீழ் இந்த ஒரு உரிமையை மீண்டும் பெறுவதற்கே ஓராண்டுக் காலம் போராடவேண்டியிருக்கிறது என்றால், புதிய உரிமைகளைப்பெற நீங்கள் இன்னும் எத்துணை ஆண்டுகள் போராடவேண்டியிருக்குமோ தெரியவில்லை! சீசன் டிக்கட்டு வெற்றிக்கு நீங்கள் பட்ட பாடும், எடுத்த முயற்சியும், கொண்ட உணர்ச்சியும், செய்த கிளர்ச்சியும் ஓரளவுக்கு வேலை செய்திருக்கின்றன என்றாலும், தோழர் மீர்ஜா எம். பி. அவர்களின் அரிய முயற்சியும், தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களின் ‘அருள் உள்ளமு’ம், பொதுத் தேர்தல் சூழ்நிலையும் பேருதவி புரிந்திருக்கின்றன! எப்படியோ உங்களுக்கு வெற்றி கிடைத்துவிட்டது! அந்த அளவில் உங்களுக்கு என் மகிழ்ச்சி; பாராட்டு; வாழ்த்துக்கள்!

உங்களுடைய கோரிக்கைகள் நியாயமானவையாகவும், அரசினரால் எளிதில் நிறைவேற்றிவைக்கக் கூடியனவாகவுமே இருந்தும், அவற்றைப் போராடித்தான் பெற்றுத்தீரவேண்டும் என்ற நிலைமை நீடிப்பது இரங்கத் தக்கதாகும். ‘கிளர்ச்சிகள் செய்வதன் மூலம் சுதந்திர அரசாங்கத்துக்குத் தொல்லைகள் தரக்கூடாது, அரசியலாரின் மனப்போக்கு தானே மாறுங்காலம் வரையிலும் பொறுத்திருக்க வேண்டும்’ என்று சிலர் செப்புகின்றனர். இந்தியத் துணைக் கண்டத்தின் விடுதலைக்கு ஊறு தேடும் வகையிலோ அல்லது இந்தியத் துணைக் கண்டத்தைக் காட்டிக்கொடுக்கும் வகையிலோ உங்கள் கிளர்ச்சிகள் அமைந்துவிடக் கூடாது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் உங்களுடைய கிளர்ச்சிகளும், போராட்டங்களும் அப்படிப்பட்ட ஊறுகளைத் தேடுவன அல்ல; அவை உள்நாட்டுக்குள்ளே நியாயமான அடிப்படையில் நடைபெறக் கூடிய உரிமைக்கிளர்ச்சிகளேயாகும். நீங்கள் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுவது, பகைவன் பகைவனோடு போராடும் ஒரு போராட்டம் அல்ல, தந்தையிடம் தேவைகளைக் கோரி நிற்கும் தனயன் ஒருவனின் உரிமைப் போராட்டமாகும். ‘கேள் கொடுக்கப்படும், தட்டு திறக்கப்படும்!’ என்று ஏசு வேறோர் காரணத்திற்காக ஓரிடத்தில் குறிப்பிட்டிருப்பது போல ‘கேளுங்கள் கொடுக்கப்படும்—தட்டுங்கள் திறக்கப்படும்’ நீங்கள் தேவைகளைக் கேட்டால்தான் அரசியலார் கொடுப்பார்கள்; நீங்கள் கிளர்ச்சிகள் மூலம் தட்டினால் வழிவகைகள் திறக்கப்படும். அநீதியை, அக்கிரமத்தை அகற்றுவதற்கு ஏற்ற கருவி அறக்கிளர்ச்சிதான். அந்தக் கருவியை முறையோடும் தெளிவோடும் பயன்படுத்த நீங்கள் பழகிக் கொள்ளவேண்டும்.

நாட்டை ஒரு உடலாகக் கொண்டால், தபால்-தந்தித் துறைகளை அந்த உடலில் ஓடும் நரம்புகளுக்கு ஒப்பிடலாம். உடலின் எந்த உறுப்பினிடத்தும் நிகழும் நிகழ்ச்சியைச் செய்திமூலம் எப்படி நரம்புகள் மூளைக்கு எட்டவைக்கின்றனவோ அதுபோல, நாட்டின் பல பகுதிகளுக்குள்ளே செய்திகள் பரிமாறப்படுவதற்குத் தபால்-தந்தித்துறைகள் பயன்படுகின்றன. உடம்பின் நரம்புகள் கோளாறு அடையாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு இன்றியமையாதது தபால்-தந்தித் துறைகள் துவளாமலும் தூங்காமலும், தளராமலும் தயங்காமலும், அயர்வடையாமலும் அல்லற் படாமலும் பார்த்துக் கொள்ள வேண்டியது. நரம்புகள் வேலை செய்யாமற்போனால் உடலுறுப்புக்கள் எவ்வாறு சொரணை அற்றனவாகக் காணப்படுமோ, அவ்வாறு நாட்டின் பகுதிகள் சொரணையற்றனவாகக் காணப்படும் தபால்-தந்தித் துறைகள் செவ்வனே பணியாற்றாமற்போனால்.

உங்களுடைய உரிமைகளைப் பற்றி நான் எந்த அளவுக்கு வற்புறுத்துகிறேனோ, அந்த அளவுக்கு நீங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளைப் பற்றியும் வற்புறுத்த வேண்டியவனாக இருக்கிறேன். உரிமையும் கடமையும் இணைபிரியக்கூடாது. அவை இரண்டும் உங்களுக்கு இரண்டு கண்கள். உரிமையற்ற கடமையினால் வாழ்வில்லை; கடமையற்ற உரிமையினால் பலனில்லை.

நீங்கள் வெறும் பொறிகளைப் (இயந்திரங்களை) போலவோ அல்லது மந்தைக்குச் சென்று பட்டிக்குத் திரும்பும் மாடுகளைப் போலவோ வாழ்க்கை நடத்துபவர்களாக இருக்கக் கூடாது. உழப்பைக் குறைத்துப், பயனை மிகுவித்து, இன்பத்தைப் பெருக்கக் கூடிய புதிய புதிய வழிகளை உங்கள் துறையில் மட்டுமல்லாமல், நீங்கள் பழகும் சமூகத்திலும், நீங்கள் நடமாடும் நாட்டிலும் புகுத்த முன் வரவேண்டும். உங்களுடைய அறிவும் ஆற்றலும் துருப்பிடித்த இரும்பாக இருந்துவிடாமல் சாணைப்பிடித்த பயன்படு கருவியாக மிளிரவேண்டும்.

தபால் - தந்தித்துறைகளை அணுகும் பொது மக்களுக்குத் தொல்லைகளும் துயரங்களும், கஷ்டங்களும் நஷ்டங்களும் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டியவர்களும், அவை ஏற்படாமல் மேலதிகாரிகளிடத்தும், அரசியலாரிடத்தும் வற்புறுத்தி வாதிட்டு நிற்க வேண்டியவர்களும் நீங்களே யாவீர்கள். எடுத்துக் காட்டாக ‘நயாபைசா’ என்ற பெயரில் புகுத்தப்பட்டிருக்கும் ‘புதுக் காசு’ அஞ்சலகங்களில் எவ்வளவு குழப்பத்தை உண்டாக்கியிருக்கிறது பாருங்கள். சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றாமலேயே, இன்றைய இந்திய அரசியலார், ‘நயாபைசா’ என்பதன் பேரால் அஞ்சல் கட்டணங்களைத் தான்தோன்றித்தனமாக உயர்த்தியிருக்கிறார்கள். பழைய அணாக்களையும், பழைய பைசாக்களையும் எந்த விதி முறையில் புதிய காசுகளாக மாற்றி மதிப்பிட்டுக் கொள்ளவேண்டும் என்று அட்டவணை வழங்கியுள்ள அரசியலார், அந்த விதிமுறைக்கு அடங்கி நடக்காமல், அஞ்சல் கட்டணங்களைத் தம் விருப்பம் போல் மிகவான புதிய காசுகளாக மாற்றியமைத்துக் கொண்டு வேதனை விளையாட்டு புரிகின்றனர். வேலியே பயிரை மேய்வது போல், அரசாங்கமே விதி முறையை மாற்றிக்கொள்ளுகிறது என்றால், சாதாரணப் பொதுமக்களும் வியாபாரிகளும், மதிப்பீட்டை மிகவான காசுகளாக மாற்றிக்கொள்ள யாரைக் கேட்கவேண்டும்? அரசாங்கம் அஞ்சல் உறைக்கு ஒரு காசு ஏற்றினவுடனே, உப்பு, புளி, மிளகாய் வியாபாரிகள் தங்கள் பொருள்களின் மதிப்பீட்டையும் தங்கள் விருப்பம் போல் மாற்றிக்கொண்டு விட்டார்கள். இப்படிப்பட்ட அநீதிகள் தபால்-தந்தித் துறைகளில் ஏற்படும் போதெல்லாம் அவற்றைச் சுட்டிக்காட்டித் திருத்தவும், அரசினருக்கு நல் வழிகாட்டவும் உங்கள் சங்கம் துணிவோடு முன் வரவேண்டும்.

தமிழகமக்களோடு தொடர்பு கொள்ளத் தாய் மொழி தமிழும், தமிழகமில்லாத பிறபகுதிகளோடு தொடர்புகொள்ள உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலமும் இருக்கும்போது, தமிழகத்தில் நடமாடும் அஞ்சல்மடல், அஞ்சல் உறை, பணம் அனுப்பும் தாள் ஆகியவற்றில் இந்தியை முழுக்க முழுக்கப் புகுத்தியிருப்பது வேண்டப்படாத செயல்களாகும். தமிழக அஞ்சலகங்களில் தமிழ் அஞ்சல் மடல்களும், ஆங்கில அஞ்சல் மடல்களும் வைக்கப் பட்டிருப்பதால், தமிழர் தமிழர்க்கு எழுதும் போது

(12-ம் பக்கம் பார்க்க)

# எம். எல். ஏ. நால்வர்

[ஜமீன்தார் தருமலிங்கம் போட்மெயில் முதல் வகுப்பில் அமர்ந்திருந்தார். அமர்ந்திருந்தார் என்பதைவிடச் சாய்ந்திருந்தார் என்றே சொல்லவேண்டும். அவர் ஒரு 'புதிய' காங்கிரஸ் எம். எல். ஏ.! எம். எல். ஏ. அவருக்குப் புதிதல்ல, காங்கிரஸ்தான் புதிது. முதல் சட்ட சபைக் கூட்டத்துக்குச் சென்னைக்குப் போய்க்கொண்டிருந்தார்.

வண்டி ஒரு ஜங்ஷனில் நிற்கும்பொழுது, வக்கீல் வாஞ்சிநாதன் அதே வண்டியில் ஏறுகிறார். அவரும் ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ.! ஆனால் ஜமீன்தாரரைப்போல, காங்கிரசுக்குப்புதிதல்ல. கொஞ்சகாலமாக-ஒரு பத்து வருடங்களாக என்று வைத்துக்கொள்ளுங்களேன். இந்தியாவுக்கு விடுதலை கிடைத்தபின்தான், அவருக்கு "ஞானோதயம்" உண்டாகி, காங்கிரஸ் "பக்தி" ஏற்பட்டு, ஜில்லா காங்கிரஸ் தலைவராகவும் ஆனார். இப்பொழுது எம். எல். ஏ. வாக ஆகிவிட்டார். புதிதாக வந்துள்ள பலருடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அவர் "பழைய" காங்கிரஸ் வாதியாகி விட்டார்.]

வாஞ்சி: ஜமீன்தார்வாளா! நமஸ்காரம்!

ஜமீன்: வாஞ்சியா, வாப்பா! உட்கார்!

வாஞ்சி: ஜமீன்தார் காங்கிரசில் சேர்ந்து விட்டார் அப்படின்னு சேதி வந்ததும், எனக்கு அப்படியே பரம திருப்தி! எங்கள் ஜில்லாவிலுள்ள பெரிய மனிதர்களிடமும் உங்களைப்பற்றித்தான் சொன்னேன். "தகட்டூர் ஜமீன்தார் தருமலிங்கம் காங்கிரசில் சேர்ந்து விட்டார், இப்படிப்பட்ட பெரியவர்களெல்லாம் மனம் மாறி, காங்கிரஸ் சேவைக்கு வந்தது பாரத தேசம் செய்த புண்ணிய பலந்தான்!" என்று சொல்லி, இவ்வளவு நாளும் காங்கிரசுக்குவெளியே விரோதம் பாராட்டிக் கொண்டிருந்தவர்களைக் கூட, காங்கிரசுக்குள்ளே கொண்டு வந்து போட்டேன். மற்ற ஜில்லாக்களைவிட என் ஜில்லாவில் காங்கிரசுக்கு அமோக வெற்றி!

ஜமீன்: நல்ல வெற்றி தான்!

வாஞ்சி; ஊரிலிருந்த பெரிய மனிதர்களெல்லாம்,மனசுதிரும்பி காங்கிரசுக்குப் பாடுபட்டது பெரிது தான், ஒவ்வொருவரும் போட்டி போட்டுக் கொண்டல்லவா ஒத்தாசை தந்தார்கள்! சொன்னால் கூட நம்ப மாட்டார்கள், அந்த அளவுக்கு உற்சாகம்! ஏன், உங்களையே எடுத்துக் கொள்ளலாம்! உங்களைப் பார்க்கும் பொழுதெல்லாம் "காங்கிரசில் நீங்கள் சேர வேண்டும்" என்று நான் சொல்லியிருக்கிறேன். எலக்ஷன் ஒரு மாதத்துக்கு முன் கூடச் சொன்னேன். அப்பொழுதெல்லாம் ஒத்து வராதபோது, "காங்கிரஸ் சார்பாக தகட்டூர் ஜமீன்தார்" என்று பெயர் வந்ததும் நான் அப்படியே மலைத்துப் போனேன். போன தடவைக் காங்கிரசைத் தோற்கடித்த ஜமீன்தார் இந்தத் தடவைக் காங்கிரசில் நிற்கிறாரென்றால், யார்தான் ஆச்சரியப்பட மாட்டார்கள்!

**இரா.செழியன்**

ஜமீன்: நாமினேஷன் போடுவதற்கு மூன்று நாள் முன் வரை காங்கிரசில் நிற்பதாக எனக்கு எண்ணமே இல்லை.

வாஞ்சி: அப்புறம்......

ஜமீன்: எங்கள் ஊருக்கு சி.எம். வந்து, என்னைக் கூப்பிட்டனுப்பினார்.

வாஞ்சி: சி. எம்னு யார்?

ஜமீன்: அது தான் சீப் மினிஸ்டர், காமராஜர்!

வாஞ்சி: பரவாயில்லை, எங்கள் பரிபாஷை யெல்லாம் உங்களுக்கும் வந்துவிட்டது.

ஜமீன்: அவர் கூப்பிட்டு "நீ தான் இந்தத் தொகுதியில் நின்றாகவேண்டும்" என்று கண்டிப்பாகச் சொன்னார், நானும் சரியென்று ஒப்புக் கொண்டேன்.

வாஞ்சி: நின்றீர்கள், வெற்றியடைந்தீர்கள்!

ஜமீன்: என்ன அவ்வளவு சுலபமாகச் சொல்லி விட்டாய். நின்றதற்கும் வெற்றியடைந்ததற்கும் மத்தியில் நான் பட்ட பாடு உனக்கென்ன தெரியும்? எப்படியாவது தேர்தல் முடிந்தால் போதுமென்றாகி விட்டது. நாமினேஷன் போட்டதிலிருந்து செலவுக் கணக்கை எழுதி, ரிடர்னிங் ஆபீசருக்கு அனுப்பிக்கிற வரை தாங்க முடியாத தொல்லை!

வாஞ்சி: எவ்வளவு செலவு ஆயிற்று?

ஜமீன்: ஐயாயிரத்து அறுநூறு ரூபாய்.

வாஞ்சி: எலக்ஷன் ஆபீசுக்கு நீங்கள் காட்டிய கணக்கைக் கேட்கவில்லை. உங்களுக்கு ஆன செலவு எவ்வளவு மொத்தமாக?

ஜமீன்: அதைக் கேட்கிறாயா? அது மூன்று லட்சத்துக்கு மேல் வந்து விட்டது.

வாஞ்சி: என்ன ஜமீன்தார்! சொன்னால் எலெக்ஷன் ஆபீசுக்கு அனுப்பிய செலவைச் சொல்லுகிறீர்கள், இல்லையானால் காமராஜரிடம் சொல்ல வேண்டிய செலவைச் சொல்கிறீர்கள். நமக்குள் ஏன் அதெல்லாம்? உங்கள் தொகுதியில் உண்மையாக எவ்வளவு செலவாயிற்று அதைச் சொல்லுங்கள்!

ஜமீன்: என் தொகுதியில் மட்டும் ஒன்னரை லட்சம் ஆயிற்று.

வாஞ்சி: பின் ஏன் மூன்று லட்சம் என்று சொல்கிறீர்கள்?

ஜமீன்: அவசரப்படாதே! என் தொகுதியில் ஒன்னரை லட்சம் செலவு, அத்துடன் நிற்கவில்லை. தேர்தலில் நிற்கும்பொழுதே சி.எம். என்னை ஒரு தொகுதியில் நிற்கச் சொல்லி "பக்கத்திலிருக்கிற மூன்று தொகுதிகளையும் கவனித்துக் கொள்!' என்று சொன்னார். அப்படி கவனிக்க ஆரம்பித்ததால், செலவு கணக்கில் இரண்டு லட்சம் ஏறிவிட்டது.

வாஞ்சி: இருக்கிறவர்கள் கொஞ்சம் கவனித்துக் கொள்ள வேண்டியது தான்! பலன் இல்லாமற் போகவில்லையே, காங்கிரசில் சேர்ந்ததால் நீங்கள் ஜெயித்தீர்கள்!

ஜமீன்: அப்படியில்லை, நான் சேர்ந்ததால் காங்கிரசுக்கு மூன்று நான்கு இடங்கள் கிடைத்தன. முன்னமே எனக்குத் தெரிந்திருந்தால், இவ்வளவு சிரமப்பட்டிருக்க மாட்டேன்.

வாஞ்சி: எது தெரிந்திருந்

ஜமீன்: மந்திரிப் பதவி
தான்.

வாஞ்சி: ஓகோ!

ஜமீன்: சி. எம். வந்தபே
என் தோளில் கைபோ
கொண்டதும், இன்னொ
வந்து சிரித்துப் பேசிய
குட்டித் தலைவர்கள்
"மந்திரி பதவி இவ
நிச்சயம்தான்!" எ
காதில் விழும்படி சொ
தும், எல்லாம் எனக்கு
பிக்கையைக் கொடுத்
செலவும் செய்தேன்.

வாஞ்சி: ஆமசம்! மந்திரி ப
யாருக்கோ கிடைக்கி
இங்கு இருக்கிற நூற்
பத்தோருபேர்களில் ந
ஒருவர் கிடைக்காமல், ப
மெண்டுக்குப் போகிற
வரைக் கூப்பிட்டுவந்து
சாரம்செய்து, மாலைபோ
மந்திரி பீடத்தில் ஏ
வைத்திருக்கிறார்கள். இ
இருக்கிறவர்களில் பா
அதற்கு லாயக்கில்லைய
நான்தான் இருக்கிறே
என்றால் இந்த மந்திரிவே
கூடவா பார்க்கத்தெரிய

ஜமீன்: தஞ்சாவூர் ஜில்
வில் இருந்த காங்கிரஸ்
எல். ஏக்கள் தங்கள் ஜில்
வுக்கு ஒரு மந்திரி தரா
டால், கருப்பு பா
அணிந்துகொண்டு ச
சபைக்கு வரப்போவதா
சொன்னார்கள். அதற்
பயந்து மந்திரிபதவி ஒ
கப்பட்டதோ?

வாஞ்சி: அதெல்லாம் கி
யாது. இப்பொழுது என்
நடந்தது, நன்றாகப் பார
கள்! தஞ்சை ஜில்லா எ
எல். ஏக்கள் தங்கள் ஜில்
வுக்கு மந்திரி கேட்டது,
களில் ஒருவருக்குக் கிடைக்
மென்று! தஞ்சை ஜில்
வுக்கு மந்திரிபதவி
கொடுக்காமல் இருந்தா
வது பாதகமில்லை. தஞ்
ஜில்லாவுக்கு ஒரு மந்தி
பதவி தரப்பட்டது. ஆன
தஞ்சை ஜில்லா எம். எ
ஏக்களுக்கு அது கிடைக்
வில்லை! இப்பொழுது அ
கள் ஒரு கருப்பு பா
அல்ல பெரிய கருப்
போர்வை வாங்கி முக்கா
போட்டுக்கொண்டு போ
அசெம்பிளியில் உட்கா
வேண்டும்.

ஜமீன்: அவ்வளவு அவசிய
என்று நினைத்திருந்தால்
முதலிலேயே அசெ
பிளிக்கு நிறுத்திவைத்திரு
கலாம். பார்லிமெண்டுக்
போடச்சொல்லி, பின் அ
இருந்து சென்னைக் கவுன்
சிலுக்கு வரச்சொல்லி, அவ
ரையே கவுன்சில்லீடராகப்
போட்டு, அப்பப்பா! கா
ராஜர் எவ்வளவுஅமர்க்கள
செய்கிறார்!

வாஞ்சி: அவரும் சும்மா செய்
வில்லை. பக்தவச்சலம்—சு
பிரமணியம் இவர்களுக்கு

ஒரு அடி! பக்தவத்சலத்துடைய கவுன்சில் முதல்வர் பதவி போயிற்று. மந்திரி சபையில் சுப்பிரமணியத்து போட்டியாக இன்னொருவரைத்—தனக்கு வேண்டிய வரை வைத்துக்கொண்டார்! டில்லிக்கு வரப்போக, புரியாத விஷயங்களைப் புரிந்து சொல்ல, தனக்கு நம்பகமான ஒருவரைக் காமராஜர் மந்திரிசபையில் சேர்ந்துக் கொண்டார்.

**ஜமீன்:** காமராஜருக்கு பலம் தான்!

**வாஞ்சி:** பலம்தான், ஆனால் இரவல் பலம்!

**ஜமீன்:** தேர்தல், மந்திரிசபை எல்லாம் ஒரே கூத்தாகப் போய்விட்டது; தரம் குறைந்துவிட்டது.

**வாஞ்சி:** மந்திரிசபையைப் பற்றிச் சொல்வதோடு, தேர்தலையும் ஏன் சேர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?

**ஜமீன்:** முன்பெல்லாம் தேர்தலென்றால், எவ்வளவு மதிப்பு இருந்தது. மதிப்புள்ள பெரிய குடும்பத்தார்கள் போட்டியிடுவார்கள். தேர்தலில் ஈடுபடுவது குடும்பக் கௌரவமாக இருந்தது. இப்பொழுது தேர்தல் என்றால் யார் யாரோ வருகிறார்கள் தேர்தலில் இருந்த அந்தஸ்து வரவரக் குறைந்து விட்டது. அதிலும் இந்த முன்னேற்றக் கழகத்தான் வந்ததும் போதும், மோசமாகிவிட்டது.

**வாஞ்சி:** அவர்கள் நிரம்பத் தொல்லை கொடுத்து விட்டார்களோ! செலவு அதிகமாகிவிட்டதோ?

**ஜமீன்:** செலவைப் பற்றிச் சொல்லவில்லை. தேர்தல் என்றால் செலவு என்று தான் அர்த்தம். ஆனால் இதற்கு முன்பு தேர்தலுக்கிருந்த "அந்தஸ்து" போய் விட்டது. முன்பெல்லாம் தகட்டூர் ஜெமிந்தார் நிற்கிறேனென்றால், பகட்டூர் ஜெமிந்தாரும் நிற்பார். நமக்கு ஒருலட்சம் செலவு அவருக்கு ஒன்னரைலட்சம் செலவு என்று ஆகும். தேர்தல் முடிவில் நமக்கு வெற்றி தோல்வி எது வந்தாலும், எதிரிக்கு நல்ல செலவுதான் என்ற திருப்தி இருக்கும். இப்பொழுது நமக்கு ஒருலட்சம் செலவு என்றால் கழகத்தானுக்கு ஆயிரம் இரண்டாயிரம்தான் செலவு செய்கிறான்.

**வாஞ்சி:** அதற்குமேல் அவன்களுக்கு வக்கு ஏது? வழி ஏது? நூறுபேர்களுக்குமேல் போட்டு ஒரு லட்சத்துக்கும் ரூபாய் குறைவாக இருந்தால் எப்படி முடியும்? தேர்தல் என்றால் சாமான்யமா? கழகத்தான் களிடம் பணம் இல்லை என்பது காமராஜருக்கு நன்றாகத் தெரியும். என் தொகுதியில்கூட ஒருத்தன் போட்டியிட்டான். இருந்த ஆயிரத்தைச் செலவு செய்துவிட்டு, தேர்தலுக்கு ஐந்து நாளைக்கு முன்பே முடங்கிப் போய்விட்டான்! அதற்குமேல் அவன் ஜம்பம் செல்லவில்லை.

**ஜமீன்:** இருந்தாலும் ஆயிரம் இரண்டாயிரம் செலவு செய்தாலும், என்ன பாடுபடுத்தி வைத்து விட்டார்கள். ஒன்னரை லட்சம் செலவு செய்து எனக்கு இருபத்தாறாயிரம் ஓட்டுகள்தான் அவனுக்கு இருபத்து மூவாயிரம் ஓட்டு. முன்னெச் சரிக்கையாக காங்கிரஸ் சார்பாக மூன்றுபேர் போடவில்லையென்றால், அவன் அடித்தாலும் அடித்திருப்பான்.

**வாஞ்சி:** காங்கிரஸ் சார்பாக மூன்று பேரா?

**ஜமீன்:** ஆமாம்! நாங்களே இன்னும் இரண்டு பேரை சுயேட்சையாகப் போட்டு வைத்தோம். அவர்களைப் போட்டதால், அவன் ஓட்டுக் கொஞ்சம் பிரிந்தது மூன்று பேர் சேர்ந்து வேலை செய்திராவிட்டால், அவனை தோற்கடிப்பது கஷ்டமாயிருக்கும்.

(வண்டி ஒரு ஜங்ஷனில் நிற்கிறது. புதிதாக ஒருவர் அவரும் சென்னைக்குச் செல்கிற காங்கிரஸ் எம். எல். ஏ. பெயர் ஏகாம்பரம்! காங்கிரசில் உண்மையாகத் தொண்டாற்றியவர். 1942 போராட்டத்தில் காங்கிரசில் இருந்து சிறைப்பட்டார், தனித் தொகுதியில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்)

**வாஞ்சி:** ஏகாம்பரமா? வா. வா! உன்னை அடையாளமே தெரியவில்லை. இன்னும் கருத்துப்போய் உடம்பு கூட இளைத்துப் போயிருக்கிறது. ஜமீன்தார்! இவன் தான் ஏகாம்பரம், பழுதூர் தொகுதியிலிருந்து எம். எல். ஏ!

**ஜமீன்:** அப்படியா? (மெதுவான குரலில் வாஞ்சிநாதன் பக்கம் திரும்பி) நம்ம ஆளா? காங்கிரஸ் சார்பாக வந்தவர்ரா?

**வாஞ்சி:** (சிரித்து) என்ன. அப்படி மெதுவாகக் கேட்கிறீர்கள். காங்கிரஸ்தான்! நல்ல தொண்டர், நான் ஏதாவது மகாநாடு, பெரிய கூட்டம் போட்டால் ஏகாபரத்தைக் கூப்பிடாமலிருக்கமாட்டேன் நல்ல ஊழியன்! காங்கிரஸ் தொண்டர்களெல்லாம் ஏகாம்பரமென்றால் உயிரை விடுவார்கள்!

**ஜமீன்:** அப்படியா? உட்காருங்கள். (காலை கீழே போட்டு, இடம் தருகிறார். ஏகாம்பரம் எதிர் வரிசையிலேயே தூரமாக உட்காருகிறான்.)

**வாஞ்சி:** ஏகாம்பரமில்லை யென்றால். அந்த தனித் தொகுதி நமக்குக் கிடைக்காது.

(தனித்தொகுதி என்றதும், ஜமீன்தாரின் முகமலர்ச்சி குறைகிறது: மடக்கிக்கொண்ட காலை மறுபடியும் நீட்டிக்கொள்கிறார்.)

**வாஞ்சி:** (ஜமின்தாரிடம் மெதுவான குரலில்) இவன் கொஞ்சம் வெகுளி! அவனுக்கு முன்னால், வெளிப்படையாக எதையும் பேசிவிடாதீர்கள்! (ஏகாம்பரம் பக்கம் திரும்பி). நீ எம். எல். ஏ. ஆனது எனக்கும் பரமதிருப்தி. உன்னைப்போல உண்மை ஊழியர்களுக்கு நல்ல பெருமை அளிக்கவேண்டுமென்று நான் அடிக்கடி சொல்வதுண்டு!

**ஏகாம்:** எனக்கு அல்ல அந்தப் பெருமை, காங்கிரசுக்குத் தான் அந்தப் பெருமை! மகாத்மா காந்திஜிக்கு அந்தப்பெருமை' நமக்கெல்லாம் வழி காட்டியாக இருக்கிற நேருஜிக்கு அந்தப் பெருமை! சுதந்தரப் போராட்டத்தை நடத்தி சுதந்திரத்தை வாங்கித் தந்த காங்கிரசுக்கு அந்தப் பெருமை! நாமடைந்த வெற்றியெல்லாம் அன்னை பாரதமாதா அளித்த ஆசிர்வாதத்தின் பலன்கள்!

**ஜமீன்:** (பேப்பரை பார்த்தபடி வாஞ்சிநாதன் பக்கம் திரும்பி) பிரசங்கமே பண்ண ஆரம்பித்து விட்டான்.

**வாஞ்சி:** (மெதுவான குரலில்) அவன் பிரசாங்கம் பண்ணிப் பழக்கம்! முதலில் சொன்னேனே, கொஞ்சம் வெகுளி, எதற்கெடுத்தாலும் தேசம், காங்கிரசு, மகாத்மா என்று பேசுவான்!

**ஏகாம்:** தேசம் இருக்கிற நெருக்கடியான கட்டத்தில், எந்த இடத்திலிருந்து நாம் ஊழியஞ் செய்யவேண்டுமென்றாலும், அந்தக் கட்டளைக்கு நாம் கீழ்ப்படியவேண்டும். எம். எல். ஏ. ஆக இருந்துபணியாற்றுகஎன்று நேரு சொல்கிறாரென்றால். பாரதமாதா கட்டளையிடுகிறாள் என்று அர்த்தம்! அதற்கு நாம் கீழ்ப்படிகிறோம்!

(ஜமின்தாரும் வாஞ்சிநாதரும் அலுப்படைகிறார்கள். அந்த நேரத்தில் வண்டிக்குள் இன்னொருவர் வருகிறார். அவரும் சென்னைக்குப் போகும் ஒரு எம். எல். ஏ. பெயர் நல்லமுத்து. ஏகாம்பரத்திடமிருந்து தப்பிக்க, வாஞ்சிநாதன் நல்ல முத்துவை வரவேற்கிறான்.)

**வாஞ்சி:** நல்லமுத்து! உமது தேர்தல் வெற்றி நேற்று பத்திரிக்கையில் தான் வந்தது, பார்த்தேன், சந்தோஷம்! ஜமின்தார்! இவர் தான் நல்ல முத்து!

**ஜமீன்:** எனக்கு நன்றாகத் தெரியுமே! போன தடவை தேர்தலில் நல்லமுத்து எனக்கு எதிராக எவ்வளவு கூட்டத்தில் வந்து பேசினார்!

**நல்ல:** காங்கிரசை எதிர்த்து நீங்கள் நின்றீர்கள் காங்கிரஸ் சார்பாக உங்களை எதிர்த்துப் பேசினேன்!

**ஜமீன்:** இப்போது உனக்கு அந்தக்கவலை யெல்லாம் வேண்டாம். நான் இப்பொழுது காங்கிரசில் சேர்ந்து விட்டேன்.

**நல்ல:** தெரியுமே!

(வாஞ்சிநாதர் ஜமின்தார் கவனத்தைத் திருப்ப முயலுகிறார். ஜமின்தார் அதை லட்சியம் செய்யவில்லை.)

**ஜமீன்:** உங்கள் தொகுதியில் காங்கிரசுக்குப் பலமான போட்டியா?

**நல்ல:** (சிரிப்பு) போட்டி தான்! காங்கிரசுக்கு எதிர்ப்பு அதிகம்!

**ஜமீன்:** இருந்தால் என்ன?

**நல்ல:** இருந்தால் என்னவா? காங்கிரஸ் எதிர்ப்பு வெற்றி பெற்றது.

**ஜமீன்:** என்ன?

**வாஞ்சி:** (குறுக்குட்டு) உங்களுக்கு ஒன்றும் புரியாது. காங்கிரசை எதிர்த்து சுயேட்சையாக நின்று நல்ல முத்து வந்திருக்கிறார்!

**ஜமீன்:** (குழப்பமடைந்து) அப்படியா? அப்பொழுது தீவிரக் காங்கிரசுக் காராய், என்னைக்கூட எதிர்த்துப்........ ...

**நல்ல:** இப்பொழுது நீங்களெல்லாம் காங்கிரசுக்குள் வந்து விட்டீர்கள். நான் வெளியே வந்து விட்டேன். காங்கிரசுக்கு எதிராக என் தொகுதியில் சரியாக யாருமே போட்டியிடாததால் நானே சுயேட்சையாக நின்றேன்! ஏதோ தப்பித் தவறி வந்துவிட்டேன்!

**ஏகாம்:** காங்கிரஸ் காரர்களே பதவிக்காக இப்படி மாறினால் என்ன செய்வது?

**நல்ல:** ஏகாம்பரம்! நீ 1940 லிருந்து காங்கிரசில் தீவிரமாக இருக்கிறாய், நான் 1930 லிருந்து தீவிரமாக உழைத்தவன். இந்தத் தேர்தலுக்கு முன்னால் கட்சியை விட்டு வெளியே போகவில்லை. போன தேர்தல் முடிந்த உடனே காங்கிரசுக்கு முழுக்குப்போட்டவன்! காந்தியார் வைத்த காங்கிரஸ் போய் விட்டது. நயா பைசா மாதிரி இது ஒரு நயா காங்கிரஸ்! பணக்காரர்கள் கொட்ட மடிக்கிற கூடாரம்!

**வாஞ்சி:** (பேச்சை மாற்ற, பத்திரிகையைப் புரட்டி) சட்ட சபையில் தீ!

**ஜமீன்:** சட்டசபை கூட முடியாதே! என்ன செய்வார்கள்!

**வாஞ்சி:** அதிகச் சேதமில்லை! தீயை அணைத்து விட்டார்கள்!

**ஏகாம்:** எப்படி வந்தது? யாராவது தீ வைத்து விட்டார்களா?

**நல்ல:** யார் வைத்த தீ! யார் வைத்திருப்பார்கள், கோட்டைக்குள் போய்! ஏழை பாழைகள் நெஞ்சில் வெந்த

(12-ம் பக்கம் பார்க்க)

# ராஜபவனம்

(விந்தியவரம்பன்)

கண்ணைக்கவரும் வண்ண மலர்த்தோட்டம். அதன் நடுவே தூணில் அழகியதாய் நன் மாடங்கள் துய்ய நிறத்தினதாய் விண்ணுயர் மாளிகை. அடுத்துத் தாமரைப் பூத்துக் குலுங்கும் தடாகம். ஆடும் மயிலும், ஓடித் திரியும் புள்ளி மான் கூட்டங்களும் உண்டு. எந்தப் புறம் திரும்பினாலும், எழிலை வாரியிறைத்துக் கொண்டிருக்கும் சூழ்நிலைகள். வர்ணனை அரண்மனையை நினைவூட்டுவதாய் இருக்கிறதல்லவா? அரண்மனைதான்! ஆனால் அரசன் அதிலே இல்லை; அரண்மனையின் அதிகாரமும், ஆடம்பரமும், சிறிதளவும் குறைவிராது. அரசன் என்ற பெயரில் ஒரு கொலுப்பொம்மை இல்லையே தவிர, தர்பாரும் தடபுடலும் விருந்தும் வேடிக்கையும் ஒய்வதில்லை.

ஏதோ செல்வத்திலே புரளும் சீமான் மாளிகை போலும், ஆலை அரசனே, பெரும் மிட்டா மிராசோ இப்படி இருக்கக் கூடும் என்ற எண்ணம் எழத்தான் செய்யும். இத்தகைய மாளிகையும் மந்தகாச வாழ்வும், ஒன்றல்ல இரண்டல்ல இன்று இந்தியாவில் இருப்பது ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொன்று என்ற வகையில் அமைந்திருக்கிறது.

வெள்ளையன் இந்த நாட்டை கொள்ளையடிப்பதற்கென்றே கொடிகட்டி ஆண்டு வந்தான். மக்களை வரிதரும் பிராணிகளாகவே கருதினான். நமது வரிப்பணத்தால் இங்கிலாந்து நாட்டின் வாழ்வு உயர்ந்தது என்றெல்லாம் ஆத்திரத்தோடு அனல் கக்கும் வார்த்தைகளால் வெள்ளையனை திட்டித்தீர்த்தகாலம் ஒன்று இருந்தது. வெள்ளையன் தனது ஆட்சி ஆட்டம் கண்டுவிடக் கூடாது என்பதற்காக பல்வேறு அரசியல் துறைகளிலேயும் தனது பிடிப்பைப் பலப்படுத்தியே வைத்திருந்தான். அதன் காரணமாகவே மாநிலங்களில் கவர்னர்என்ற பதவியை ஏற்படுத்தினான். மாளிகை வாழ்வும் அதே நேரத்திலே அதிகாரமும் கவர்னரிடத்தில் குவித்து வைக்கப்பட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால், அர்த்த மற்ற அவசியமற்ற கவர்னர் பதவிகளை ஒழித்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்போம் என்று சொன்னவர்கள் தான் இன்று ஆட்சி நடத்துகிறார்கள். மக்களின் வரிப்பணம் தனிப்பட்டோரின் கோலாகலமான வாழ்வுக்கு வழிகோலுவதா என்று மேடையதிரக் கூவியவர்கள் இன்று செலவிட்டு வரும் ஆடம்பரச் செலவுகளைப் பார்த்தால், நெஞ்சமுள்ளோர் அனைவரும் பதறத்தான் செய்வர்.

ஆளும் கட்சி காங்கிரஸ், எனவே கவர்னர்களாக இருப்போர் அந்தக் கட்சியைச் சேர்ந்த பெரிய புள்ளிகளாய்த் தானிருப்பர் என்ற நிலைமை இன்று சட்ட வடிவத்தில் இல்லாவிட்டாலும், நிச்சயமான நிகழ்ச்சியாக நடைபெற்று வருகிறது. மேலிடத்தின் தயவிருந்தால் போதும், ஏதாவது இது போன்றதொரு கோட்டையில் கொலுவீற்றிருக்கும் வாய்ப்பு நிச்சயம் கிடைக்கும் என்ற நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிறது. தேர்தலில் தோற்றுப்போனவர்கள் மனத்தேறுதல் அடையும்-வேறு மார்க்கமாகவும், அத்தகையோருக்குப் புகலிட மாகவும் இந்த மாளிகைகள் ஆகிவிட்டிருக்கின்றன. கோலாகலத்திற்கும் கொள்ளைச் செலவிற்கும் பெயர்போன இந்த இடங்களுக்கு வெள்ளைக்காரன் வைத்த பெயர் 'கவர்னர் மாளிகை' என்பதுதான். அவன் பைத்தியக்காரன் பெயர்ப் பொருத்தம் கூடப்பார்க்கத் தெரியாதவன் என்பதுபோல, இந்தப் பாரத புத்திரர்கள் அந்த இடத்திற்கு 'ராஜ பவனம்' என்ற அழகிய பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். பெயரே அழகையும் கெம்பீரத்தையும், ஆடம்பரத்தையும் அதிகாரத்தையும் காட்டுவதாகவன்றோ இருக்கவேண்டும்! வீரமில்லாவிட்டாலும் விருதுகள் வேண்டும் என்பதுபோல், ஏழையர் நாடாயிருந்தாலும் இத்தகைய ஆடம்பரங்களுக்குக் குறைவிருக்கக்கூடாது!

கவர்னர் என்றால் என்ன சும்மாவா, வருகின்ற போகின்ற வெளிநாட்டு ராஜதந்திரிகளை வரவேற்கவேண்டும் விழாக் கோலம் காட்டி வருவோரை மயங்கச் செய்து நாட்டிற்கு நற்பெயர் தேடித்தரவேண்டும். இவையெல்லாவற்றிற்கும் எவ்வளவு திறமையும், அறிவும் தேவைப்படும். அதற்கென்று நிச்சயப்படுவோர் எத்தகைய நிலையில் வாழ அனுமதிக்கப்பட்டால் இவ்வளவும் ஒழுங்காக நடைபெறும் என்றல்லவா நம்முடைய சர்க்கார் வெகு கவனத்தோடு, கவர்னர் பதவிகளை ஒழிக்காமல் காப்பாற்றியதோடு மட்டுமல்ல, பாதுகாத்து, போற்றிப் புகழ்ந்து மேலும் வளர்த்து வருகிறார்கள்.

ஆண்டு ஒன்றுக்கு இத்தகைய ராஜபவனங்களின் ஆடம்பரம் குறையாமல் பாதுகாக்கப் படுவதற்கென்று பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் செலவிடப்பட்டு வருகின்றன. செலவிடப் படுகின்ற தொகை, ஏழை எளியவர்களின் வியர்வைத்துளிகள் என்பதை மறந்து, பன்னீரில் குளித்தெழுந்து பரிமளகந்தம் பூசிவாழும் ஆடம்பரப் பிரியர்கள் சட்டசபைகளின் அனுமதி பெறுமலே செலவிடவும் அதிகாரமும் பெற்றிருக்கின்றனர். ஆண்டு ஒன்றுக்கு இத்தனை இலட்சங்கள் என்று வரையறுக்கப்பட்டிருக்கும் செலவு போக, மேலும் சில செலவுகளுக்கு என்று சட்டமன்றத்தின் அனுமதிபெறுமலே செலவழிக்க அவர்கள் உரிமைபெறுகிறார்கள். அதன்படி இந்த 'ராஜபவனங்கள்' ஆண்டு ஒன்றுக்கு கீழ்க்கண்ட முறையில் செலவு செய்யலாமாம்.

1. அபிவிருத்தி ரூ 50,000
2. காத்தலும், புதிப்பித்தலும்

| | | |
|---|---|---|
| (அ) | தோட்டங்கள் | ரூ 49,000 |
| (ஆ) | மின்சாரம் | ,, 55,000 |
| (இ) | தண்ணீர் | ,, 18,000 |
| (ஈ) | வரிகள் | ,, 65,000 |
| (உ) | புதுப்பித்தல் | ,,103,000 |

ஆகமொத்தம் ரூ 340,000

மேலே தரப்பட்டிருக்கும் செலவினங்களுக்கென்று, தனித்தனியாக ஒவ்வொரு துறைக்கென ஒதுக்கபபட்டிருக்கும் இனங்களில், ஏதாவது கூடுதலான செலவு ஏற்படுமானால், மற்ற துறையின் செலவினத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையை செலவழிக்கவும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதாம். இப்படி ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையைவிட அதிகமாக செலவழிக்கப்படுகின்ற தொகைக்கு இந்தியக் குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்றால் போதும். செலவினங்களின் தொகை வெறும் பராமரிப்பு, பாதுகாப்பு என்ற வகையில் தோட்டம் துரவு, கட்டிடம் என்ற வகைக்குமட்டும்தான் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. 'இவை தவிர மற்ற செலவுகளுக்கு— அதாவது கவர்னர்களின் சம்பளம், அவருடையஆள் அம்புகள் சம்பளம், விருந்து விழாக்களுக்கு செலவாகிறபணம், மற்றும் இதர ஆடம்பரச் செலவுகள் இவைகள் அத்தனையும் எண்ணிப்பார்த்தால் ஒரு தனி மனிதருக்கு, ஒரு மதிப்பு வாய்ந்த பதவியென்ற பெயரில் எந்த அளவுக்கு பொதுமக்களின் பணம், மடை உடைத்த வெள்ளமென ஆக்கப்பட்டிருக்கிறது என்பது புரியும். இவை

யெல்லாவற்றிலும் பெரி
வேடிக்கை என்ன வென்ற
இத்தனை அரண்மனையிலு
கொலுவீற்றிருப்போரும், கா
தியாரின் வழித் தோன்றல்க
தாங்கள்தான் என்று கூறி
கொள்ள என்றுமே தயங்க
வர்கள். 'ஏழை எளியவர்களி
பிரதிநிதிகள் அவர்களி
உண்மைத் தொண்டர்க
தோழர்கள் தாங்கள்மட்டு
தான்' என்று காப்பறை சா
ருத நாளும் கிடையாது.

சம்பளம் போதவில்
என்றுஏங்கித்தவிக்கும்ஆர
ஆசிரியர்கள் அரசாங்க அ
வலகங்களில் வேலை பார்க்கு
நடுத்தர வகுப்பார், வே
செய்தும் கூலி சரியாகக்கிடை
கவில்லை என்று குமுறு
ஆலைத் தொழிலாளிகள், ப
சம் பட்டினியோடு வாழ்வை
நகர்த்திக் கொண்டிருக்கு
உழவர்கள், இருந்த தொழிலும்
நசித்து விட்டதால், பிறந்
மண்ணை விட்டுப் பிற இட
களைத் தேடிச் செல்லும் நெ
வாளர்கள் இப்படிப்பட்டோர்
நிரம்பிய நாட்டிலே தான் இ
படிப்பட்ட கோலாகலம்
கொழிக்கும் கொலுமண்டப
கள்! தரித்திர நாராயணர்கள்
தருகிற வரிப்பணத்திலே த
பார் மண்டபங்கள்! அரைப்
பட்டினி கால்பட்டினிகள்
என்று மக்கள் ஆலாய்ப் பற
கின்ற அதே நேரத்திலே தான்
இத்தனை ஆடம்பரங்கள்!


காண்பதெல்லாம் தொழி
லாளி செய்தான் அவன்
காணத்தகுந்தது வறுமையாம்
அவன் பூணத்தகுந்த
பொறுமையாம். கண்ணீரும்
வியர்வையும் தருகின்ற
காணிக்கையிலே உல்
லாச ஓடங்களை மிதக்க வி
கிறார்கள் இந்தத் தர்பார் சூரா
கள். இருக்க இடமின்றி
தவிக்கும்ஏழையர்கூட்டம்எரா
ளம் இங்கே! நடை பாதை
வசிப்போர், வாழ்வு முழுவ
தையும் சாக்கடையோரங்களி
லும் சந்து பொந்துகளிலுமே
கழிப்போர், மாடினும் கீழாய்த்
தாழ்ந்து போனோர், தேய்ந்து
போனோர் குறைந்தாரில்லை
மேலும் அதிகரித்த வண்ண
முள்ளனர். இங்கேதான் இத்
தகைய 'ராஜ பவனங்கள்'
ஏழ்மை எளிமையைக் கேலி
செய்வது போல! இந்த
நிலைமை தேவைதானா, நீடிக்க
வேண்டுமா? ஈரமுள்ள நெஞ்
சினர் யாராயினும் அவர்கள்
கூறட்டும்!

## ஓடவில்லை, பறந்தது!

மிக வேகமாக ஓடிக்கொண்டிருந்த காரைப் பின்னால் துரத்திக்கொண்டு, போலீஸ் கார் வந்தது. 80, 90 மைல் என்று கார் ஓட்டுபவர் ஆபத்தான வேகத்தில் போய்க் கொண்டிருந்தார். கடைசியாக குறுக்குப் பாதை ஒன்றின் வழியாக போலீஸ்காரர் போய் அதை நிறுத்தினர்.

வேகமாக ஓட்டிவந்தது குற்றமென்பதை உணர்ந்த கார்காரர், "காரை வேகமாக ஓட்டி வந்துவிட்டேனா?" என்று கேட்டார்.

"வேகமாக ஓட்டியதாகச் சொல்லமுடியாது, தாழ்வாகப் பறந்து வந்ததாக வேண்டுமானால் சொல்லலாம்!" என்று போலீஸ்காரர் தனது குறிப்புப் புத்தகத்தை எடுத்தார்.



# உதிர்ந்த ரோஜா

**செல்வன்**

அன்று ஞாயிற்றுக்கிழமை. என் அலுவலக விடுமுறை நாள். நண்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, இளங்கோ மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் 'மனித இன வளர்ச்சிக்கு விஞ்ஞானத்தின் தொண்டு'' என்ற பொருள்பற்றிப் பேச ஒப்புக் கொண்டேன். பொதுவாக மனித இன வளர்ச்சிக்கு விஞ்ஞானம் செய்துகொண்டு வரும் நன்மைகளைக் கூறிவிட்டு, 'எண்ணற்ற நலன் பயக்கும் விஞ்ஞானம், எல்லையில்லாத் தொல்லைகளையும் கொடுக்கிறது' என்பதையும் குறிப்பாகக் கூறி 'விஞ்ஞானம் வெறும் அறிவியற்கலையாக மட்டும் வளர்க்கப்படுமானால் அழிவுச் சக்திகளை அதிகமாக்குவதற்குத்தான் பயன்படும் என்றும், ஆகவே விஞ்ஞானத்தை அறிவியற்கலையாக மட்டுமின்றி மனித இன முன்னேற்றத்திற்கும், நலனுக்கும் உதவக்கூடிய சக்தியாகவும் அக்கலையை வளர்க்க வேண்டும்' என்றும் கூறி என் பேச்சை முடித்தேன்.

என் பேச்சு முடிந்ததும் கூட்டத்தில் இருந்த ஒருவர் என்னை நெருங்கி ''ஐயா! எங்கள் 'இளைஞர் சீர்திருத்தக் கழகத்'தின் சார்பில் நடைபெற இருக்கும் கூட்டத்தில் 'சமூகச் சீர்திருத்தத்தில் இளைஞர் பணி' என்னும் பொருள் பற்றிப் பேசவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். எங்கோ பார்த்துப் பழகிய முகம் மாதிரித் தெரியவே கூட்டத்திற்கு ஒப்புக் கொண்டேன். சிறிது நேரம் என் நினைவு அலைகள் கடந்த காலம் என்ற கரையில் அடித்து என் கல்லூரி வாழ்வை கரையில் ஒதுக்கிவிட்டுச் சென்றது. 'உங்கள் பெயர் ........' என்று இழுத்தேன் நான்.

''பரமானந்தம்... பச்சையப்பன் கல்லூரியில் படித்தேன். தங்களைக் கூட......!' என்று நீட்டி நினைவுப் புத்தகத்தைத் திருப்பினர். அவருக்கு அதிக வேலை கொடுக்க விரும்பாமல், என்னைப்பற்றிய விஷயங்களைச் சொன்னேன். சிறிது நேரம் பேசி இருந்த பிறகு கூட்டத்தன்று வருவதாகக் கூறி விடைபெற்றேன். வீட்டிற்கு வரும் வரை என் நினைவெல்லாம் அந்த நாளையக் கல்லூரி வாழ்வைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அதைத் தொடர்ந்து பரமானந்தத்தின் கல்லூரி வாழ்வு என் கவனத்திற்கு வந்தது.

அழுக்கேறி அறியாத ஆடைகள்—கவலையறியாத வாழ்வு—கண்ட பெண்களுடன் பழக்கம். நண்பர்களுடன் அரட்டை. இப்படியாகத் திரிந்த பரமானந்தமா 'இளைஞர் சீர்திருத்தக் கழகத்'தைத் தோற்றுவித்தவன்—என்ற எண்ணம் என்னை அவனைப் பற்றி ஆராயத் தூண்டியது. எவ்வளவோ சிந்தனைக்குப் பிறகும் என்னால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. இந்த மாற்றத்திற்குக் காரணம் என்ன என்பதை அவனைக் கேட்டே தெரிந்து கொள்வது என்று முடிவு கட்டிக்கொண்டு கூட்டம் நடக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். பிறர் மாற்றங்களையும் ரகசியங்களையும் அறிந்து கொள்வதில்தான் எவ்வளவு ஆவல்!

கூட்டத்தன்று பேச்சுக்கள் முடிந்த பிறகு பரமானந்தத்துடன்பேசிக்கொண்டிருக்கையில் அவன் மாறிய விதம் பற்றிக் கேட்டேன். சிறிது நேரம் என்னையே மௌனமாக உற்றுப் பார்த்தான். அவன் கண்களில் நீர்த்திரையிடுவது தெரிந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு, தன் பையிலிருந்து பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருந்த ஒரு கடிதத்தை எடுத்துக் காண்பித்தான். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ''உன் மாற்றத்திற்கும் இந்த மடலுக்கும் என்ன தொடர்பு'' என்று நான் அவனைக் கேட்கவில்லை. அவனே ஆரம்பித்தான். ''நண்பரே! என்னிடம் ஏற்பட்டிருக்கும் இம்மாறுதலுக்கும் இந்தக் கடிதத்திற்கும் தொடர்பு இல்லாமலில்லை. தொடர்பு என்று கூறுவதைவிட என் இன்றைய வாழ்வின் வழிகாட்டி இந்தக்கடிதம். வாழ்வு வெளியில் இன்பம் என்று நினைத்து தொலை தூரத்தில் வானம் தரையைத் தொடுவதாகத் தோன்றும் இடம் நோக்கி வீண் பயணம் செய்து கொண்டிருந்த என்னைத் தடுத்து வாழ்வு எங்கோ இல்லை, இங்கே இருக்கிறது, உன்னுள் இருக்கிறது என்று காட்டி என் கண்களைத் திறந்தது இந்தக் கடிதம்''

''அது யாரப்பா! அவ்வளவு பெரியவர். கண்டது காட்சி எனக் கவலையற்றிருந்த உன் கண் திறந்தவர் யார்?''

''அது யாரென்று எனக்குத் தெரியாது. ஆனல், அவள் எழுதிய ஒரே கடிதம்...''

''யாரென்று உனக்குத் தெரியாது. ஆனல் உன் வழிகாட்டி என வணங்குகிருய்!''

உணர்ச்சிப் பெருக்கில் வார்த்தைகள் வெளிவரவில்லை நடுங்கிய கைகளிலிருந்த கடிதத்தை என்னிடம் கொடுத்தான்.

''என்னை யாரென்று தெரியாதவருக்கு!

என்னை யார் என்று உங்களுக்குத் தெரியாது. ஆனல் என்னைப்போல் வேறு யாரும் உலகில் உங்களை நன்ருகப் புரிந்து கொண்டதில்லை. உலகில் யாரிடமும் பற்று, பாசம், அன்பு இவைகளின்றி எப்படியோ நீங்கள் வாழ்ந்துவிட்டீர்கள். ஆனல் உலகில் என் பற்று, பாசம், அன்பு எல்லாம் உங்களிடத்தில்தான். நீங்கள்தான் என் உலகம். உங்கள் உலகம் மிகப் பரந்தது. என்போன்ற எத்தனையோ பெண்களை உங்கள் உலகில் சந்தித்திருப்பீர்கள். ஆனல் என்னைப்போல் உங்களிடம் அன்பு கொண்டவளை, உங்களைப்பற்றிய சின்னஞ்சிறு விபரங்கள் எல்லாம் என்னைப் போல் நினைவில் வைத்திருப்பவளை நீங்கள் காணமுடியாது. இவ்வளவும் கொண்டிருக்கும் என்னை யார் என்று உங்களுக்குத் தெரியாது.

அதோ! என் மகன் இறந்து கிடக்கிருன். சின்னஞ் சிறு கால்கள் தத்தித்தத்தி நடக்க, பிஞ்சுக் கைகள் என் முகத்தில் கோடு கிழித்து விளையாட, அதைக் கண்டு கன்னங்குழி விழச் சிரிக்கும் குழந்தைப் பருவத்தில் என்னை விட்டுப் பிரிந்திருந்தால்கூட எனக்கு இவ்வளவு துயரமும் இருந்திருக்காது. வளர்ந்து வாலிபப் பருவத்தில் வாழ்வைத் துவக்க வேண்டிய வயதில் என்னைத் தனியே, தன்னந் தனியே தவிக்க விட்டுவிட்டுச் சென்று விட்டான்! இனி எனக்கு வாழ்வில் உங்களைத் தவிர வேறு என்ன இருக்கிறது. ஆனல் உங்களுக்கு என்னைத் தெரியாது. என்னைத்தெரிந்து கொள்ளவும் முடியாது. நீங்கள் அதற்கு முயற்சி செய்யவில்லை. எனக்கோ உங்களிடம் அன்பு செலுத்தாமல் இருக்க முடியாது! எவ்வளவு விசித்திரமான வேதனை!

இறந்த என் மகனுடன் இந்தஇரவு நேரத்தில், என்னல் என் துயரக் கதையை யாரிடமாவது சொல்லி அழாமல் இருக்க முடியாது. உங்களுக்கு வேண்டுமானல் எவ்வளவோ பேர்கள் இருக்கிருர்கள். எனக்கு உங்களைத் தவிர வேறு உலகம் இல்லை. என் முடிவு நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்தக் கடிதத்தை முடிக்க முடியுமா என்ற ஐயம் என்னை ஆட்கொண்டுவிட்டது, என கைகள் நடுங்குகின்றன. அடிக்கடி கண்ணீர்த்துளிகள் என் கண்களை அடைத்துக் கொண்டு எழுத்தைத் தடை செய்கின்றன. என் உடலில் எஞ்சியிருக்கும் பலத்துடன் என் மன உறுதியையும் சேர்த்து எப்படியாவது இந்த என் கடிதத்தை—ஆம், என் வாழ்வின் முதல் கடிதம், கடைசிக் கடிதமும் இதுவே!—முடிக்க விரும்புகிறேன்—

என் வாழ்வு முழுவதும் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசையினல் இதை உங்களுக்கு மட்டும் எழுதுகிறேன். ஏனென்ருல் என் வாழ்வின் முழுப்பகுதியும் உங்களுடையது. ஆனல் உங்களுக்கே தெரியாது. இந்தக் கடிதம் உங்கள் கையில் கிடைக்கும் நேரத்தில் நான் உங்களை விட்டுப் பிரிந்து-இந்த உலகை விட்டுப் பிரிந்து வெகுதூரம் சென்றுவிடுவேன். ஆகையால் நீங்கள் யாருக்கும் பதில் சொல்லவேண்டிய அவசியம் இருக்காது. உங்கள் கைகளிலிருக்கும் கடிதம் இறந்த ஒருவளின் கதையைச் சொல்கிறது. ஆனல் அந்தக் கதை முழுதும் உங்களுடையதே

சுருங்கச் சொன்னால் உங்களுக்குத் தெரியாத உங்கள் வாழ்வை இந்தக் கடிதம் உங்களிடத்தில் எடுத்துச் சொல்கிறது. ஏதேது! எவளோ ஒருத்தி நம்மிடம் பணம் பிடுங்குவதற்காக எதையோ எழுதுகின்றாள் என்று உங்கள் வழக்கம்போல அலட்சியமாக இருந்துவிடாதீர்கள். நான் இறந்தவள்! இறந்தவள் உங்களிடம் எதை எதிர்பார்க்கமுடியும்? உயிரோடு இருக்கும் காலத்திலாவது உங்கள் அன்பையும், ஆசியையும் எதிர்பார்த்து ஏமாந்தேன்! இப்பொழுது இறந்தவள் எதையும் உங்களிடம் எதிர்பார்க்கவில்லை. இரக்கமற்றவர்கள் கூட இறந்த என் மகனுக்கு அருகில் இருந்து நான் எழுதும் இந்தக் கடிதத்தைப் படிக்காமல் இருக்கமாட்டார்கள்.

"என் வாழ்க்கை முழுவதும் உங்களுக்கு கூறப்போகின்றேன். என் வாழ்வு, உங்களை முதன் முதல் நான் சந்தித்த நாளில் தொடங்கியது. என் வாழ்வில் நீங்கள் முதன் முதல் குறுக்கிட்ட பொழுது எனக்கு வயது பதின்மூன்று. பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது நீங்கள் குடியிருக்கும் அதே கட்டிடம். என் கடிதத்தைப் படித்துக் கொண்டிருக்கிறீர்களே அதே அறைக்கு எதிரில் இருக்கும் அறையில்தான் நானும் என் விதவைத் தாயும் குடியிருந்தோம். ஆம்! உங்களுக்கு நினைவிருக்காது. எங்கள் பெயர் கூடக் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். எங்களைத் தேடி யாரும் வருவதில்லை. எங்கள் அறையின் முன்பக்கத்தில் எங்கள் பெயர் எழுதிய பித்தளைப் போர்டு எதுவும் இல்லை. ஆகையால் உங்கள் அறைக்கு எதிரில் இருந்த போதிலும் உங்கள் வரவை எதிர்பார்த்து கதவோரத்தில் காத்திருக்கும் என்னையோ, பிறர் வம்புக்குப் போகாமல் தான் உண்டு தன் வேலை உண்டு என்றிருக்கும் என் தாயையோ உங்களுக்குத் தெரியாமல் இருப்பதில் ஆச்சரியமில்லை. சின்னஞ்சிறு வயதாக இருந்த போதிலும் நான் மட்டும் உங்களைப்பற்றிய செய்திகளை ஒரு சிறிதும் மறந்துவிடாமல் நேற்றுதான் கண்டது போல நினைவில் வைத்திருக்கிறேன். உங்கள் பொறுமையை நான் மிகவும் சோதிக்கிறேனா? எவ்வளவு பொறுமையுடன் உங்கள் வரவையும் உங்கள் அன்பையும் எதிர்பார்த்து என் வாழ்நாள் முழுவதும் நான் வாடியிருக்கிறேன் தெரியுமா?

நீங்கள் வருவதற்கு முன் அந்தக் கட்டிடத்தில் வாழ்ந்தவர்கள் எல்லாம் ஏழைகளாகயிருந்தும் ஏழைகளான எங்களை வெறுத்தார்கள். நானும் என் தாயும் அவர்களிடம் அதிகம் பழகுவதில்லை. அதைக் காரணமாகக் கொண்டு எங்களைப் பிரித்து வைத்துப் பரிகாசம் செய்தார்கள். எங்கள் அடுத்த வீட்டுக்காரன் குடிகாரன். ஒரு நாள் இரவு நன்றாகக் குடித்துவிட்டு தன் மனைவியை 'ஏன் குடித்தாய்?' என்று கேட்ட பாவத்திற்காக நன்றாக உதைத்தான். அடி தாங்காமல் அலறிக் கொண்டு அறையைவிட்டு வெளியே ஓடிவந்து ஒப்பாரி வைத்தாள் அந்த அம்மாள், அவர்களின் குழந்தைகள் மூலைக்கொன்றாக கத்திக் கொண்டு ஓடின. அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் வெளியே தலையை நீட்டி 'போலீஸுக்கு ஆள் அனுப்புவோம்' என்று சொன்ன பிறகு அழுகையும் அலறலும் ஓய்ந்தன. இதைப் போன்ற எத்தனையோ காட்சிகள் நித்தம் நடக்கும். நானோ என் தாயோ இவர்களிடம் எந்தவிதத் தொடர்பும் வைத்துக் கொள்வதில்லை. பள்ளிக்குச் செல்லும் பொழுதுகூட அவர்கள் குழந்தைகளுடன் சென்றால் என் அம்மா திட்டுவாள். அவர்களுடன் சேர்ந்து விளையாடக் கிளம்பிவிட்டாலோ அவ்வளவுதான் அன்றைக்கு என் முதுகைப் பதம் பார்த்துவிடுவார்கள் என் தாய். இதற்காக அந்தக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் பொழுது என்னைத் திட்டுவார்கள். எனக்குக் கோபம் வரும். அதைத் தொடர்ந்து அழுகையும் ஆத்திரமும் வரும். வேறு வழியின்றி என் நிலையை நினைத்து வருந்திச் செல்வேன். இந்நிலையில் புதியவர் ஒருவர் எங்கள் அறைக்கு எதிரில் குடி வருகிறார் என்றால் என் மகிழ்ச்சிக்குக் கேட்க வேண்டுமா?

எங்கள் கட்டிடக் காவல்கார முனுசாமி சொன்னான் எதிர் அறைக்குக் குடி வருபவர் ஒரு ஆசிரியர் என்று. எந்தப் பள்ளிக்கூடத்தில் என்று கேட்டேன், "அதென்னமோ தெரியாதம்மா! இந்த கதை, கிதை எழுதுகிறவராம். கல்யாணமாகாதவர்; நல்லவராம்!" என்றான். அன்றுதான் முதன் முதல் தங்கள் பெயரைக் கேட்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இரண்டொரு நாட்களுக்குப் பிறகு அந்த அறையைச் சுத்தப் படுத்தி வெள்ளையடித்தார்கள். அதை யெல்லாம் அருகில் இருந்து மேற்பார்த்து வந்தவன் உங்களிடம் நெடு நாள் இருந்து வந்த வேலைக்காரன். தலையில் சுற்றிய முண்டாசுடன், எதிர் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த என் அம்மாவைப் பார்த்து "அம்மா! துடப்பம் இருந்தா சற்றுக் கொடுக்கிறீங்களா" என்று பணிவுடன் கேட்ட அவனை, என் அம்மாவுக்கு மிகவும் பிடித்துவிட்டது. எனக்கு மாத்திரம் அவனைக் கண்டால் பொறாமை. ஏன் எனில் அவன் எப்பொழுதும் உங்களைப் பார்க்கமுடியும். உங்கள் அறையிலேயே இருக்க முடியும், ஆனால் என்னால் முடியாதல்லவா?

பருவம் என் உருவத்தில் தன் கை வண்ணத்தைக் காட்டாத அந்தப் பள்ளிப் பருவத்திலிருந்தே உங்கள் நினைவும் உருவும் என் சின்னஞ்சிறு இதயத்தில் எவ்வளவு மாறுதலை உண்டாக்கிவிட்டன என்பதைத் தாங்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்குத் தான் இவ்வளவும் கூறுகிறேன். ஒரு நாள் மாலை பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். வீட்டிற்கு முன்பாக ஒரு வண்டியிலிருந்து மேசை நாற்காலி, புத்தகங்கள் முதலியவற்றை இறக்கி உங்கள் அறை முன்பாகக் குவித்து வைத்திருந்தார்கள். உங்கள் வேலையாள் ஒவ்வொன்றாகத் தூசியைத் தட்டி நன்றாகத் துடைத்து அழகாக அடுக்கி வைத்துக் கொண்டிருந்தான். அவ்வளவு அழகான சாமான்களையும், அதிகமான புத்தகங்களையும் நான் என்றும் எங்கேயும் பார்த்ததில்லை. ஆச்சர்யத்தால் விரிந்த கண்களுடன் ஆவல் பொங்கும் விழிகளுடன் அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கண்ணையும் கருத்தையும் கவரும் முறையில் அழகாக இருந்த புத்தகங்களையும் பொருள்களையும் தொட்டுப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. இந்த எண்ணம் அதிக நேரம் நீடித்திருக்கவில்லை. என் தாய் என்னை அழைத்தாள். வேண்டா வெறுப்பாக வீட்டினுள் நுழைந்தேன்.



நான் உங்களைப் பார்க்காமல் இருந்தும், அன்று மாலை முழுதும் உங்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். என்னிடம் இருந்ததெல்லாம் மொத்தம் பத்துப் புத்தகங்களுக்குமேல் இருக்காது. ஔவையார் அருளிச் செய்த ஆத்திச்சூடி, அருணகிரிநாதர் பாடல், திருஅருட்பா, திருக்குறள் இவைகள் தவிர எஞ்சியவை என் பாடப் புத்தகங்கள். இவற்றிடம் எனக்கு அளவு கடந்த ஆவல். உங்களைப் போல் அதிகமான புத்தகங்களும், அழகான அலமாரிகளும் எனக்குக் கிடையாது. தாய் மொழி தவிர வேற்று மொழிப் புத்தகமும் கிடையாது. ஆனால் தங்கள் குவியலில் எனக்குப் புரியாத எத்தனையோ மொழிப் புத்தகங்கள் இருந்தன. எவ்வளவு அழகான பொருள்கள், புரியாத மொழிப் புத்தகங்கள் இவற்றிற்குச் சொந்தக்காரரான தாங்கள். இதை நினைக்கும்பொழுது என்னையறியாமல் தங்களிடம் பக்தியும் பாசமும் பெருகிற்று. அசைந்தாடும் வெண் தாடி, வழுக்கைத் தலை, தடித்த கண்ணாடி இவற்றுடன் எங்கள் பள்ளி வரலாற்று ஆசிரியர் மாதிரி ஒல்லியான உருவம். ஆனால் அவரைப்போல் கண்களில் கடுமையான பார்வை இல்லை. அதிகாரத்திற்குப்பதில் அன்பை வெளிப்படுத்தும் பேச்சு. இவ்விதமாகத் தான் அன்று மாலை நீங்கள் என் மனக் கண்முன் காட்சியளித்தீர்கள். கள்ளங் கபடமில்லாத பள்ளிப் பருவத்தில் என் போன்ற பதின்மூன்று வயதுச் சிறுமியின் கற்பனை, இத்தகைய உருவம் தான் அவ்வளவு புத்தகங்களையும் படித்திருக்க வேண்டும் என்று எண்ணியதில் தவறில்லையே!

மறுநாள் நீங்கள் வந்தீர்கள். எவ்வளவு நேரம் காத்திருந்தும் அம்மா ஏதோ வேலையாக என்னை உள்ளே அனுப்பிய அந்த நேரத்தில்தானா நீங்கள் வரவேண்டும். உங்களைப் பார்க்க முடியாமல் போனதால் ஏற்பட்ட ஏமாற்றம், உங்களைக் காணவேண்டும் என்ற ஆவலைத் தூண்டியது. எவ்வளவோ

முயன்றும் மூன்றாம் நாள் தான் உங்களைப் பார்க்க முடிந்தது. என்ன ஆச்சரியம்! என் கற்பனைக் கண்கள் காட்டிய உருவத்திற்கும் உங்களுக்கும் எவ்வளவு வித்தியாசம்! நான் எதிர் பார்த்ததோ வயோதிகர். வந்ததோ வாலிபர்! ஆம் இன்றும் நீங்கள் வாலிபர் தான். காலத்தின் சுவடு ஒரு சிறிதும் உங்களிடம் காணவில்லையே! ஒரே எட்டில் இரண்டு மூன்று படிகளைத் தாண்டி மாடிக்கு ஏறி வந்தீர்கள். அன்று நான் தங்கள் நடையில் கண்ட சிறு பிள்ளையின் துடுக்குத் தனம் இன்று வரை உங்களிடம் அப்படியே இருக்கிறது. தங்கள் முகத்தைப் பார்த்தேன். விளையாட்டும் வேடிக்கையுமாகத் திரிவதும், அதே சமயத்தில் அறிவைப் பெருக்கும் ஆற்றலும் மிகுந்தவர் என்பதை உணர்ந்தேன். என்னையறியாமலேயே தாங்கள் வாழும் இரட்டை வாழ்வை நான் அன்றே உணர்ந்தேன். ஒன்று உலகிற்குத் தெரியும். மற்றொன்று உங்களுக்கு மட்டும் தான் தெரியும்! பருவம் அடையாத அந்தப் பள்ளி வயதில் தங்களது இரட்டை வாழ்வைப்பற்றி தங்களைப் பார்த்த முதல்நாளே அறிந்து கொண்டேன்.


அன்றிலிருந்து என் விளையாட்டு, வேடிக்கை, ஆர்வம் எல்லாம் நீங்களாகத் தான் இருந்தீர்கள். எப்பொழுதும் உங்களை, உங்கள் செயல்களை, உங்களைக் காண வருபவர்களைக் கவனித்துக் கொண்டிருப்பேன். இவற்றால் உங்களைப் பற்றிய எண்ணம் அதிகமானதே தவிர குறையவில்லை. கல்லூரி மாணவர்கள், பத்திரிக்கை நடத்துபவர்கள், அச்சிடுபவர்கள், விழா நடத்துவோர், பெண்கள் இவர்கள் தான் உங்களைப் பார்க்க வருபவர்கள். இவர்களைப் பற்றி நான் எதுவும் சிந்தித்ததில்லை. பருவமடையாத வயது, பக்குவமடையாத உள்ளம், காதலின் ஆரம்பம் தான் நான் உங்களைப் பற்றி அவ்வளவு ஆர்வத்துடன் எல்லாவற்றையும் கவனிக்கத் தூண்டியது என்பது அப்பொழுது எனக்குத் தெரியாது.

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் அன்பில் தருமலிங்கம் அவர்களின் தாயார் திருமதி ஆச்சிக்கண்ணு அம்மையார் அவர்கள் 21-4-57ல் இயற்கையெய்தினார்கள் என்ற செய்தி கேட்டு, வருந்துகிறோம்.

அன்னையைப் பிரிந்து துயருறும் தோழர் அன்பில் அவர்கட்கும், அவரது குடும்பத்தினர் உற்றார் உறவினருக்கும் நமது ஆழ்ந்த ஆறுதல்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆனால் நான் உங்களுக்கு அடிமையான அந்த நாள் இன்றும் கூட என் நினைவில் பசுமையாக இருக்கிறது. உங்கள் அறைக்கு எதிராக நானும் என் பள்ளித்தோழியும் நின்று பேசிக் கொண்டிருந்தோம். நீங்கள் அப்பொழுதுதான் மாடிப் படிகளைத் தாண்டி அறை நோக்கி வந்து கொண்டிருந்தீர்கள். என் உள்ளுணர்வு மூடியிருக்கும் உங்கள் அறைக் கதவைத் திறக்கத் தூண்டியது. நான் அறையைத் திறக்கும் நேரமும், நீங்கள் அருகில் வரும் நேரமும் ஒன்றாக இருந்ததால் இருவரும் லேசாக மோதிக் கொண்டோம். என்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்து 'மிக்க நன்றி' என்றீர்கள். அந்தப் புன்முறுவல், அந்தப் பார்வை-அது தெரிவித்த கனிவு, அன்பு, அடக்கம், ஆண்மை-இன்றைக்கு நினைத்தாலும் என் நெஞ்சு நெகிழ்கிறது! அந்த நாளிலிருந்து நான் என்னை உங்களுக்கு உடமையாக்கி விட்டேன். இதே நளினப் பார்வையும், மோகனப் புன்னகையும் எனக்கு மட்டுமல்ல உங்களிடம் பழகும் எல்லாப் பெண்களுக்கும் அளித்தீர்கள் என்று பிறகு தான் எனக்குத் தெரிய வந்தது. உள்ள உறுதி படைத்தவர்களையும் ஒரு கணம் நிலைகுலையச் செய்யும் அந்தப் பார்வை உங்களை யறியாமலேயே உங்களிடத்தில் குடி கொண்டிருக்கிறது. தங்கள் வாழ்வில் குறுக்கிட்ட எல்லாப் பெண்களுக்கும் இதே பார்வையைத் தாராளமாகத் தந்திருக்கிறிர்கள் என்பது எனக்கு அப்போது தெரியவில்லை. ஏதோ எனக்கு மட்டும் என்று நீங்கள் அளித்த தனிச் சொத்து அந்தப் பார்வை என நினைத்து ஏமாந்தேன்! அந்த நிமிட நேரத்தில் என்னையிழந்த நான், என் வாழ்நாள் முழுதும் என்னைத் திரும்பப் பெற முடியாமல் தவித்தேன்!

“யாரது?” என்ற என் தோழியின் கேள்வி என்னை நினைவுலகிற்கு இழுத்து வந்தது. எனக்கு என்னபதில் சொல்வதென்று தெரியவில்லை. உங்கள் பெயரைச் சொல்ல என்னால் முடியவில்லை. உங்கள் பெயர் திடீரென்று எனக்குப் புனிதமாகவும், போற்றிப் பாதுகாக்கத் தகுந்ததாக எப்படிஆயிற்றுஎன்று இன்று வரை நினைத்துப் பார்க்கிறேன் இன்னும் அதற்கு விடை காண என்னால் முடியவில்லை! கேள்விக்குறி என் தோழியின் கண்ணில் இருந்து மெல்ல மெல்ல மறைந்தது. ஏளனமாக என்னைப் பார்த்தாள். “யாரோ எதிர் அறையில் இருப்பவர்” என்றேன் தடுமாற்றத்துடன். “அப்படியென்றால் அவர் உன்னைப் பார்த்ததும் ஏன் முகம் சிவந்து ‘குப்’பென்று வியர்த்தது” என்று கேட்டாள் அந்த போக்கிரிப்பெண். என்னை ஏளனம் செய்து என் இரகசியத்தை அறிய முயன்றாள்




என்ற எண்ணம் என்னை அவள் மீது கோபம் கொள்ளத் தூண்டிற்று. “சீ! போடி” என்றேன் பொங்கிவரும் கோபத்துடன். கேலியாகச் சிரித்தாள். கண்ணீர் ததும்பிக் கொண்டுவந்தது. வேகமாக விட்டிற்குள் ஓடினேன்.

அந்த நாளிலிருந்து இன்று வரை நான் உங்களைக் காதலித்துவந்தேன். எவ்வளவோ பெண்களுடன் பழகுபவர்கள் நீங்கள். தங்கள் நிலையிழந்த பெண்கள் பலர் “உங்களைக் காதலிக்கிறேன்” என்றுசொல்வதைப் பலமுறை கேட்டுப் பழகிப் போயிருக்கும் உங்களுக்கு. ஆனால் என்னைப்போல் அடிமையாக நாயைப்போன்ற நன்றியுடன், பக்தனின் பக்தியைப்போல் உங்களை நேசிப்பவர்கள் யாரும் கிடையாது என்பது உறுதி. கவனிப்பாரற்று இருந்த என் காதலுக்கு ஈடு இணை எதுவும் இல்லை. நம்பிக்கை இல்லாமல் வளர்ந்த காதல் ஆனால் உறுதியானது, பொறுமை மிகுந்தது ஆனால் ஆசையின் அளவு மிகப் பெரிது. பருவமும் பக்குவமும் இம்மாதிரியான காதலை வளர்க்குமா என்பது சந்தேகம் தான்! என்னைப்போல் தன்னந் தனியாக அன்பு பாராட்ட ஆளின்றித் தவித்த சிறு பெண்ணால் தான் அத்தகைய காதலைப் போற்றி வளர்க்க முடியும். மற்ற பெண்கள் தோழிகளின் கூட்டுறவில் அல்லது அந்தரங்கத் தோழியருடன் உரையாடும் பொழுதும் தங்கள் உள்ளத்தைத் திறந்துவிட வழி உண்டு. காதலைப்பற்றி அவர்கள் எவ்வளவோ கேள்விப்பட்டிருப்பார்கள், படித்திருப்பார்கள். காதல் உணர்வு எல்லோர் உள்ளத்திலும் எழும் என்று அவர்களுக்குத் தெரியும். சிறு குழந்தை மரப்பாச்சி பொம்மையுடன் விளையாடுவதுபோல அவர்கள் காதலுடன் விளையாடுவார்கள். ஆனால் எனக்கு அந்தரங்கத் தோழி யாருமே இல்லை, காதலைப்பற்றி யாரும் கற்றுத்தரவுமில்லை, எச்சரித்ததுமில்லை. அநுபவம் துளிக் கூடக் கிடையாது. சந்தேகப் பட்டதுமில்லை. எனக்கு நேர்ந்தவை எல்லாம் என் உணர்ச்சியைத் தாக்கியதெல்லாம் உங்களைப்பற்றியும் உங்களைப்பற்றி நான் கற்பனை செய்தவைகளைச் சுற்றியும் மையமாகக்கொண்டு நிகழ்ந்தன. என் தந்தை எனக்கு நினைவு வருவதற்கு முன்பே இறந்துபோனார். என் தாயோ வரவையும் செலவையும் சரிக்கட்டி வாழ்க்கை நடத்தும் சறுக்குப் போட்டியில் ஓயாது ஈடுபட்டிருந்தாள். வளர்ந்துவரும் பெண்ணைப் பற்றியகவலைவேறு அவளுக்கு. இந்நிலையில் என் நிலையை அறிய அவளுக்கு நேரம் ஏது? சின்னஞ் சிறுமிகளின் கவனத்தையும் கருத்தையும் கவரும் எத்தனையோ வேடிக்கைகள் எனக்குக் கிடையாது. இவற்றால் எனக்கு உங்களைப்பற்றிய நினைவும், அன்பும் அதிகமாகியது. உலகில் எனக்கு எதுவும் பிடிக்காது. ஆனால் அதில் நீங்கள் எந்தவிதத்திலாவது தொடர்பு கொண்டால் எனக்கு மிகவும் பிடித்தமானதாகிவிடும். என் வாழ்வையே மாற்றிவிட்டீர்கள்! பள்ளிக்கூடத்தில் அக்கரை அதிகம் இன்றி இருந்த நான் உங்களைச் சந்தித்த பிறகு வகுப்பில் எல்லாப் பாடத்திலும் முதலாவதாக இருந்தேன். இரவு வெகுநேரம் கண் விழித்துப் படித்துக் கொண்டிருப்பேன்- நீங்கள் ஒரு புத்தகப் பிரியர் ஆயிற்றே! ஓய்வு நேரத்தில் பாட்டும் கற்றுக் கொண்டேன். என் துணிகளைத் தைக்கவும், நன்றாக வைத்துக்கொள்ளவும் முயன்றேன், என் தாவணியில் ஒரு ஒட்டு இருந்தது என் தாயின் பழைய சேலை ஒன்றில் கிழித்துத் தைத்தது. எங்கே அந்த ஒட்டுத்துணி உங்கள் கண்களை உறுத்துமோ என்று எனக்குப் பயமாக இருந்தது. நான் ஒரு பைத்தியக்காரி! உங்களுக்கு என்னைப்பார்க்க நேரம் எங்கே இருந்தது!

(அடுத்த இதழில் முடியும்)




**வினா: தி. மு. கழகம் சட்டமன்றத்தில் போய்ச் சாதிக்கப் போவது என்ன?**

**விளக்கம்:** அழையாத வீட்டில் நுழையும் விருந்தினரைப் போல், அரசியல் உலகில் அனுதைப் போக்கில் திரியும் சிலர் இத்தகைய வினாக்களை எழுப்புகின்றனர்.

மக்களாட்சி (ஜனநாயக ஆட்சி) முறையில் ஒரு சிறிய சீரிய ஆற்றல் வலிவும், அறிவுத் தெளிவும்கொண்ட எதிர்க்கட்சி எதை எதையெல்லாம் சாதிக்க முடியும் என்று உலக அரசியலறிவிய லறிஞர்கள் எடுத்துரைத்திருக்கிறார்களோ அதைஅதையெல்லாம் தி. மு. க. சட்டமன்றக் கட்சி சாதிக்கும்.

மக்களாட்சி முறையில் எதிர்கட்சியின் பணி எவ்வளவு எழிலுடையதாகவும், இன்றியமையாததாகவும் கொள்ளப்படும் என்பதை, அரசியல் குருடர்களைத்தவிர அரசியல் உலகில் நடமாடும் பிறர் அனைவரும் நன்கு உணர்வர்.

மாட்டுக்கு மூக்கணாங்கயிறும், குதிரைக்குக் கடிவாளமும், யானைக்கு அங்குசமும், வண்டிக்குக் கடையாணியும், வயலுக்கு வரப்பும், வீட்டுக்குக் கதவும், தோட்டத்துக்கு வேலியும் எவ்வளவு இன்றியமையாதனவாகக் கருதப்படுமோ, அவ்வளவு இன்றியமையாததாக வேண்டப்படுவது ஒரு ஆளும் கட்சிக்கு ஒரு சீரிய எதிர்க்கட்சி அமைவது ஆகும்.

மூக்கணாங்கயிறு இல்லாத மாடு வண்டியை நேர்வழியில் இழுத்துச்செல்லாமல் காடு மேடு பள்ளம் படுகுழி களிலெல்லாம் கடகடவென்று இழுத்துச் சென்று பாழாக்குமா, அதைப்போல எதிர்க்கட்சி இல்லாவிட்டால், ஆளுங்கட்சி ஆட்சியை நேர்வழியில் செலுத்தாமல், தன்னல விருப்பத்தின் காரணமாகவும், அகந்தையின் காரணமாகவும் இலஞ்சம்-ஊழல்-சுயநலம்-சர்வாதிகாரம் ஆகிய தீய வழிகளிலே செலுத்தி ஆட்சியையும் நாட்டையும் பாழாக்கிவிடும். நாட்டை நெறிப்படுத்தி ஓட்டிச் செல்ல மூக்கணாங்கயிறு எப்படி இன்றியமையாததாகப் பயன்படுகிறதோ, அதைப்போலவே ஆளுங்கட்சியை நெறிப்படுத்திச் செலுத்த அறிவும் ஆற்றலும் வலிவும் பொலிவும் கொண்ட எதிர்க்கட்சி இன்றியமையாததாக வேண்டப்படுகிறது. மாட்டின்விலை இருநூற்றைம்பது ரூபாயாக இருக்கும்; மூக்கணாங்கயிற்றின்விலை முக்கால் ரூபாயாக இருக்கும். அதைப்போல தமிழகச் சட்ட மன்றத்தில் காங்கிரசுக் கட்சியினரின் எண்ணிக்கை 150 ஆக இருக்கக்கூடும்; தி. மு. கழகத்தினரின் எண்ணிக்கை 15 ஆக இருக்கக்கூடும். இருநூற்றைம்பது ரூபாய் மாடு எப்பொழுதாகிலும் இடக்கு செய்தால் முக்கால் ரூபாய் மூக்கணாங்கயிறு எப்படி அதனை வெட்டிப் பிடித்து இழுத்து நிறுத்தி நேர்வழி செலுத்துகிறதோ, அதைப்போல ஆளுங்கட்சி சர்வாதிகாரப் போக்கில் செல்லும்போது அதனைத் தடுத்து நிறுத்தும் வல்லமை எதிர்க்கட்சிக்கு உண்டு.

இன்றைய சூழ்நிலையில் தமிழகச் சட்ட மன்றத்தில் சீரிய எதிர்க்கட்சியாக விளங்குவதற்கான அறிவையும் ஆற்றலையும், கொள்கையையும் கோட்பாட்டையும், தகுதியையும் திறமையையும் திராவிட முன்னேற்றக்கழகந்தான் பெற்றிருக்கிறது.

வெளியிலே பிறருக்குத் தாளம் போடுவதையே தொழிலாகக்கொண்ட சிலர், தி. மு. கழகம் முழுக்க முழுக்கச் சட்டமன்றத்தினுள்ளேயே போய்விட்டது போலவும், இனி அது வெளியே நடமாடாதது போலவும் எண்ணிக்கொண்டு "உள்ளே போய்ச் சாதிப்பது என்ன இருக்கிறது?" என்று வறட்டுக் கூச்சல் போடுகின்றனர். அந்த வறட்டுக் கூச்சல்காரர்களைவிட சீரிய, நல்ல முறையான, தெளிவான, திட்டவட்டமான, நிலையான, நியாயமான, நேர்மையான பணிகளைப் பன்மடங்கு மிகவாகச் செய்துவரும் தி. மு. கழகம் **சட்டமன்றத்திலும்** பணியாற்ற முனைந்திருக்கிறதே யல்லாமல், **சட்டமன்றத்திலேயே** பணியாற்றப் போய்விடவில்லை.

தி. மு. க. சட்டமன்றக் கட்சி எதிர்க்கட்சியாய் அமர்ந்து மக்களாட்சிப் பண்பை நிலைநாட்டும்; அரசாங்கத்தின் நல்ல முயற்சிகளை வரவேற்கும்; தீய முயற்சிகளை முழுமூச்சோடு எதிர்க்கும்; தென்னகத்தின் வளனும் நலனும் பெருகுவதற்கான திட்டங்களை வற்புறுத்தும்; தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டவைகளை நிறைவேற்றப் பாடுபடும்; பொருத்தமான வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் திராவிடநாட்டு விடுதலை வேட்கையை உணர்த்தும்; அரசாங்கத்தின் ஊழல்களை அம்பலப்படுத்தி அதற்கு எச்சரிக்கை விடுக்கும்; தமிழை ஆட்சி மொழியாகநடைமுறைப்படுத்த அரும்பாடுபடும்; தொகுதிகளின் குறைபாட்டையும் நாட்டின் குறைபாட்டையும் போக்கவும், நிறைபாட்டை ஏற்படுத்தவும் முயற்சிகள் எடுக்கும்; சட்ட மன்றத்தில் தமிழ் மணங்கமழச் செய்யும்; நீதி, நேர்மை, நாணயம், அறிவு, தெளிவு ஆகியவற்றைச் சட்டமன்றத்தில் தவழச்செய்யும்; அறப் போராட்டங்களிலே ஈடுபட வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டால், எத்தகைய விளைவையும் ஏற்கத் தயாராகி அவற்றில் ஈடுபடும்; இன்ன பிற சாதனைகளையெல்லாம் சாதிக்கவே தி. மு. கழகம் சட்டமன்றம் புகுந்துள்ளது என்பதை உணராதோர் உணர்வார்களாக!

—இரா. நெ

# காங்கிரஸ் ஆட்சியில் "சத்தியமும்" "அகிம்சையும்"

**போலிசாரின் தடியடிப் பிரயோகத்தால் ஒருவர் இறந்தார். தடியடிப்பிரயோகமே நடைபெறவில்லையென போலிஸ் சாதித்தது..........**

"சத்யமேவ ஜெயதி" அதாவது சத்யமே ஜெயம் என்று இந்தியாவின் சுதந்திர அரசாங்கம் தனது குறிக்கோளாகக் கொண்டது. ஆனால் காங்கிரசு ஆட்சியில் சத்யத்துக்கு இடமில்லாமல் பலதடவைகள் போய்விட்டது. கொலையைச் செய்துவிட்டுக் கூடக் கூசாமல் முழுப்பொய் சொல்லிவிடுகிறது காங்கிரசு அரசாங்கம்! இது வீணாகச் சொல்லப்படும் பழிச்சொல் அல்ல, பம்பாய் அரசாங்கம் அவ்வாறு ஒரு பெரிய பழிச் செயலைச் செய்து, பின் அது கண்டுபிடிக்கப்பட்டது.

பண்டித நேரு இந்தஆண்டு துவக்கத்தில் பம்பாய்க்கு வந்திருந்தார். முன்பெல்லாம் பண்டிதர் பவனி வருகிறாரென்றால், பம்பாய் திரண்டு எழும்; பாதை ஓரங்களில் மக்கள் நின்று பூமாரி பொழிவார்கள். சௌபாத்தி கடற்கரையில் இரண்டு லட்சம், மூன்று லட்சம் எனக் கூடும். நேரு பண்டிதரின் வீரமுழக்கத்தைக் கேட்டு, மெய் சிலிர்த்து மக்கள் செல்வார்கள்.

அதே மாபெரும் நேருதான் ஜனவரி 20ந் தேதி பம்பாய் வந்தார். மாநில சீரமைப்பில் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து மக்கள் கொதித்திருந்த நேரம். தேர்தல் காலம் நெருங்கியபடியால் ஓட்டுக் கேட்க நேருபண்டிதர் வந்தார். பம்பாயில் மக்கள் வரவேற்பு தரவில்லை, எதிர்ப்பு ஒலிகளை முழங்கினார்கள்.

மாலையில் பண்டிதநேரு, கடற்கரையில் பேசினார். முன்பெல்லாம் லட்சக்கணக்கில் கூடுகிற கூட்டம் இந்தச் சமயத்தில் காணோம்! காங்கிரசுக் கணக்குப்படியே, 25,000 மக்கள் கூட்டம்! முன்பிருந்ததைப் போல பத்தில் ஒரு பங்குதான் மக்கள் வந்தார்கள், ஆனால் மைதானத்துக்கு வராமல் தூரமாக நின்றுகொண்டார்கள்.

நேருவைச் சுற்றியிருந்து பாதுகாப்புத்தர மொத்தம் 1500 போலிஸ்காரர்கள் இருந்தார்களாம், தடிகள் தாங்கி. கூட்டத்தின் இறுதியில் குழப்பம் வந்து, போலிசார் புகுந்து தடியடிப்பிரயோகம் செய்தார்கள். அதில் **ஆனந்த விகவநாத் கோலாட்கர்** என்பவர் பலமான அடிகள் பட்டு மூர்ச்சையாகி விழுந்துவிட்டார்.

கூட்டம் கலைந்து சென்றது, போலிசார் தங்கள் வேலை முடிந்ததெனச் சென்றனர். கடற்கரை மணலில் நடந்து வந்த ஒருவர், பேச்சு மூச்சு அற்று ஒருவர் கிடப்பதைப் பார்த்து, ஆஸ்பத்திரிக்குத் தூக்கிப்போனார். போகிற வழியில் அவர் இறந்துவிட்டார்.

எப்படி அவர் இறந்தார் என்பதை கண்டறிய, சட்டமன்றம் ஒரு விசாரணை நடத்தியது. போலிஸ் இலாகா கொடுத்த சாட்சி எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. போலிஸ் என்ன சொன்னார்கள் தெரியுமா?

**"தடியடிப் பிரயோகம் எதுவும் நடைபெறவில்லை."**

சிறிய கிராமமல்ல, பம்பாயில் பல லட்சக்கணக்கான மக்களுக்குத் தெரிந்திருக்கும்படி, அதுவும் பண்டித நேரு முன்னிலையில் தடியடிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது. முழுப் பூசிணியை சோற்றில் மறைப்பது போல தடியடிப் பிரயோகமே நடைபெறவில்லை எனப்பம்பாய் போலிஸ் சாதித்தது.

(12-ம் பக்கம் பார்க்க)

## 'கேள் கொடுக்கப்படும்! தட்டு திறக்கப்படும்!'

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அஞ்சல் மடல்களையும், தமிழரல்லாத பிற பகுதியினர்க்கு எழுதும் போது ஆங்கில அஞ்சல் மடல்களையும் பயன்படுத்தலாம். இதைப் போன்றே பிற மொழிப்பகுதிகளில் அந்தந்த மொழி அஞ்சல் மடல்களும் வைக்கப் பெறுமானல், அவரவர் தமக்குள்ளே தொடர்பு கொள்ள நேரிடும் போது தம் தாய் மொழி அஞ்சல்மடலின் மூலமும், பிற மொழியினரோடு தொடர்பு கொள்ளும் போது ஆங்கில மொழி அஞ்சல் மடலின் மூலமும் தொடர்புகொள்ள வழியேற்படும். இந்த முறை இந்தி ஏகாதிபத்தியத்திற்கு இடமளிக்காமல் தடுப்பதோடு, அந்தந்த வட்டார மக்களுக்கு ஏற்ற எளிமையான - பயன் படும் முறையாகவும் அமைந்துவிடும் இப்படிப்பட்ட குறைபாடு நீக்கும் முறைகளை அரசியல் துறையில் ஈடுபட்டவர்கள் மட்டு மல்லாமல், அஞ்சல் துறையில் ஈடுபட்டுள்ள உங்களைப் போன்றவர்களும் துணிவுடன் எடுத்துக் கூறவும், வாதிட்டு நிற்கவும், வற்புறுத்தி அமைக்கவும் முன்வர வேண்டும்.

தபால்-தந்தித் துறையினரின் நியாயமான தேவையான கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்க நானும், நான் சார்ந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகமும் என்றென்றும் உறுதுணையாக நிற்போம் என்று உறுதி கூறிக்கொள்கிறேன்.

## எம். எல். ஏ. நால்வர்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தீ, அங்கு போய் பற்றியிருக்கும்! முன்னையிட்ட தீ முப்புரத்தில், பின்னையிட்ட தீ தென் இலங்கையில் என்றபடி, யாரோ இட்ட தீ, சென்னை சட்டசபையில் பிடித்துக்கொண்டது.

**வாஞ்சி:** என்ன நல்லமுத்து! ஏதேதோ சொல்கிறாய்! சட்டசபையில் தீப்பிடித்ததற்கும் பட்டினத்தார் பாடலைப் பாடுகிறாயே! அங்கு உண்மையில் எப்படி தீப்பிடித்தது தெரியுமா?

**நல்ல:** எப்படி?

**வாஞ்சி:** மின்சார ஓட்டத்தில் குறுக்கு வழி ஏற்பட்டால்—அதுதான் ஷார்ட் சர்க்யூட் ஏற்பட்டால் அதனால் தீப் பிடித்துக்கொள்ளும்.

**நல்ல:** நானும் அதைத் தான் சொல்கிறேன். ஜனநாயக முறையில்கூட யாராவது குறுக்கு வழியில் சென்றால், நாட்டில் கொந்தளிப்பு உண்டாகி தீப்பொறி பறக்கும்! காமராஜர் சட்டசபையை மக்களுக்குப் பக்கத்திலிருந்த மவுண்டு ரோடு மாளிகையிலிருந்து கோட்டைக்குக் கொண்டுபோனது, முதலில் ஜனநாயக முறையில் ஒரு குறுக்கு வழிதான்!

**வாஞ்சி:** நாழியாகி விட்டது, படுக்கலாம். (விளக்கை அணைக்கிறார்.

ஜமின்தார் குறட்டைவிட்டுத் தூங்குகிறார். எதிர்ப்புறத்தில் வாஞ்சிநாதர் படுக்கிறார். அடுத்த பக்கம் போய், "பாரத சேவை" என்ற பத்திரிக்கையை ஏகாம்பரம் படிக்கிறான். நல்லமுத்து தூக்கம் பிடிக்காமல் வெளியிருட்டைப பார்த்தபடி இருக்கிறான்.

காலையில் எழும்பூரில் வண்டி நின்றதும், ஜமின்தார் தருமலிங்கம் அவருக்குச் சொந்தமான பெரிய காரில் ஏறிப் போகிறார்.

வக்கீல் வஞ்சிநாதர் ஒரு டாக்சியை வைத்துக் கொண்டு போகிறார்.

ஏகாம்பரம் ஒரு ஆட்டோ ரிக்ஷாவில் போகிறான்.

நல்லமுத்து ஒரு சைகிள் ரிக்ஷாவில் கிளம்புகிறான்.)

## காங்கிரஸ் ஆட்சியில் "சத்தியமும்" "அகிம்சையும்"

(11-ம் மக்கத் தொடர்ச்சி)

பின் கோலாட்கர் எப்படிச் செத்தார் என்றால், "சாராயம் குடித்ததால் செத்தான்" என்று அரசாங்க டாக்டர் சர்டிபிகேட்டுகளை போலிஸ் கொண்டு வந்தது.

ஆனால் கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் ஏராளமாக சாட்சி கொடுத்தார்கள். பிணத்தை உறவினர்கள் வாங்கிச் சென்ற பொழுது, "சாராயம் குடித்து இருந்ததாகச் சொல்லப்பட்ட கோலாட்கர் மீது எவ்வளவு காயங்கள் இருந்தனவாம் தெரியுமா? இடது காதுக்குப் பின்னால் மண்டை உடைந்து இரத்தம் கசிந்திருந்தது, இடது கை மணிக்கட்டுகளில் காயம், கைவிரல் நசுங்கி, உள்ளங்கை வீங்கியிருந்தது. வலது தோளிலும் முன் கையிலும் பிய்க்கப் பட்ட சதையுடன் காயங்கள்; வலது முழங்காலும் தொடையுடன் இரணமாயிருந்தது. உடலில் பல இடங்களில் தடியால் அடிபட்ட வீக்கங்கள் இருந்தன!

இதைப் பலர், நண்பர்கள், தெருவினர், கூட்டத்துக்கு வந்தவர்கள், பத்திரிக்கை ஆசிரியர்கள் — பார்த்திருந்தனர். அவர்களெல்லாம் கோர்ட்டுக்கு வந்து, சாட்சி கொடுத்தார்கள்.

கடைசியாகச் சட்டமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஜூரர்கள் "போலிசின் தடியடி பிரயோகத்தால் உண்டான காயங்களால் கோலாட்கர்; இறந்தார்" என்று மரணம் பற்றிய தீர்ப்பு கொடுத்தது.

எப்படியிருக்கிறது' "சத்தியமே ஜெயம்" என்ற உறுதிமொழியின் கீழ் "அகிம்சா முறையில்" ஆளுபவர்களின் ஆட்சி!






"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி சென்னை-1) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்க[ளால்]
[அச்சிடப்]பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. —(தொலைபேசி எண் : 55697)